காமநூல் கற்பகமென்னும்

# கொக்கோக நுட்பம்



ஸ்ரீ சங்கு விநாயகர்
13, சாஸ்திரி தெரு,
சிவகங்கை 630 561

ஆசிரியர்

## *V.D.R.* பாண்டியன்

(வரதுங்க ராமபாண்டிய மன்னர்)

சண்முகானந்தா புக் டிப்போ
67, T.K. முதலி தெரு,
சூளை, சென்னை-112

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை ரூ. 20

## சதிபதிகளின் மர்மம் (அல்லது)

# மானிட ரகசிய சாஸ்திரம்

இதில் வசந்தனுக்கும் சுலோசனாவுக்கும் விடை
விடை தாக்கங்களாகவே பெண்களை சந்தோஷிக்கச்
செய்யும் விதமும் சிசு உற்பத்தி நேர்மை சீசுவை
கவனிக்க வேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதி
பேதங்களும் அவைகளின் லட்சணங்களும் ஆண்
பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும், விதங்களும்
இன்ன ஸ்ரீயை இன்னவர் விவாகம் செய்யக் கூடும்
என்ற விதமும் போகம் செய்ய வேண்டிய நாளும்
நாழிகையும் இன்ன விதமாக சுகிக்க வேண்டிய
கிரமமும் ஆண் பெண் மலடு விவரங்களும் ருது
காலங்களும் அவைகளின் பலா பலன்களும் மாதப்
ஸ்ரீகளுக்கு அமிர்தநிலை எந்த காலங்களில் எவ்விதத்
தில் இருக்கும் என்பதையும் அதை எவ்விதமாக
நிலை பெயர்க்க வேண்டும் என்பதையும் பிரஸ்பதி
பகவான் தேவேந்திரனுக்கு அருளிச் செய்த உலோ
காயுத சம்பந்தமான விஷயங்களும் அமைந்து
உள்ளது. இன்னும் அகால சேர்க்கையால் வரும்
கொடுதியும், இதைப் போன்ற அரியப் பெரிய
மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில்
பிரசுரித்திருக்கின்றன. கண்களை கவரும் அழகிய
சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன
அழகிய முகப்புடன் கூடியது.

இதன் விலை ரூ. 25

சண்முகானந்தா புக் டிப்போ, சூளை, சென்னை-112

நூ

எ
யாவரு
மூன்று
அருளிச்
கும் உ
செய்தா
நந்திகே
மாகக்
யினல்
அதை
விளக்
தவத்
தார்க
சுருக்
ஒன்று
தில்
காது.
இந்
கவி
யென்
காரப்
வட
பரவு

புண

# நூல் வரலாறு விண்ணப்பம்

எல்லா உலகும் படைத்த பிர்மாவானவர் யாவரும் விரும்பிச் செய்யும் அறம் பொருள் இன்பம் மூன்று புருஷார்த்தங்களையும் வல்லோறுணர அருளிச் செய்து அவற்றுள் அறத்துக்கும் பொருளுக்கும் உரிய நூல்களை மநு முதலிய பெரியோர்கள் செய்தார்கள். அறிவுடையோரால் துதிக்கப்பட்ட நந்திகேசுவரர் இன்பம் நலமென்று அதை விஷயமாகக் கொண்டு அதற்குரிய காமநூலை வடமொழியினால் ஆயிரம் அத்தியாயமாகச் சொன்னார். பின்பு அதை சில பெரியோர்கள் முறை முறையே சுருக்கி விளக்கினார்கள். அவர்களில் சுவேதகேது என்பாரும் தவத்தையுடைய பாஞ்சாலரும் தொகுத்துறைத்தார்கள். அவற்றை சப்த ரிஷிகள் ஏழு வகையாகச் சுருக்கினார்கள். அவ்வேழையும் வாச்சாயன பகவான் ஒன்றாகத் திரட்டி உரைத்தார். இவர்கள் பூர்வாங்கத்தில் சொல்லிய நூல்களெல்லாம் யாவர்க்கும் விளங்காது. ஆதலால் வாச்சாயன பகவான் செய்த இந்நூலை உலகத்தில் யாவர்க்கும் விளங்கும்படி கவிஞராக புகழப்பட்டு கொக்கோகரை நீ வகுத்துரையென்று வைணவதத்தன் சொல்ல அதை அங்கீகாரம் பண்ணி வடநூற் கவிராயன் அந்த காமநூலை வடமொழியிற் சுருக்கமாக்கி உலக முழுவதும் பரவும்படி விரித்துரைத்தான்.

பெண்களுக்கு அதிகப்படியான தினவுண்டாய் புணர்ச்சியில் திருப்தி இல்லாமையால் தன் பதியை

வெறுத்து அன்னியனை எண்ணுதல் அவசியமாகும் ஆனதால் இத்தீங்கை பரிகரிக்க ஜாதி லக்ஷணங் களை நன்கறிந்து மணமக்கள் தேடுவது உசிதம் என இந்நூல் வெளியிடப்பட்டது.

## மனிதப்பிறவியின் மகிமை

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் என சுவாமிகள் மொழிப்படி எவ்விடத்தும் பரிபூரணமாய் நிறைந்து அவன் தானாய்தான் அவனால் அபேதனாய் காமாதிகளுக்கு அதீதனாய் மலரகித னாய் மெஞ்ஞானிகள் இருதயங்களில் எழுந்தருளி விளங்கும் சர்வேசன் உலகின் கண் சிருஷ்டிக்கப்பட்ட பல பூண்டு மரம் முதலியது தொட்ட வுடன் பரிசம் அறியும் ஓர் அறிவும் சங்கு மற்றவை பரிசத்துடன் சுவை



யறியும் ஈரறிவும் எலும்பும் மற்றதும் பரிசம் சுவை சுகத்தை யறியும் மூவறியும் தும்பி வண்டு முதலியது பரிசம் சுவை கந்தம் உருவத்தை யறியும் நான்கறிவும் விலங்கு பறவை முதலானது பரிசம் சதை உருவத்தோடு சமதர்மத் தையும் ஐந்தறிவும் எண்பத்திநான்கு லக்ஷ ஜீவ ராசிகளில் மகா விசேஷமானது பகுத்தறிவும் மானாபி மானமும் உண்மை தீமை இன்னதென்றுணரும் ஆரறிவு உள்ள மானிட ஜென்மம் உண்டாக்கி தன்னிலே பெயர்த்து போகக்கூடியதைச் சரமென்று உயர்த்தியும் தன்னிலே பெயராது இருந்த விடத்

திற்கும் அசையாப் பொருளை அசரமென்னும் வாழ்த்தியும் அண்டசம் சுவேதசம் உற்பிசம் சராயுசம் இந்த நான்கு வகை தோற்ற பேதமும் தேவர் மனிதர் நீர் வாழ்வன விலங்குகள் ஊர்வன பறவை, தாவரம் என்னும் ஏழு வகை பிறவிகளில் எண்பத்து நான்கு நூராயிரயோனி பேதங்களை யமைத்து அவரவர் வினைக்கீடாக பிறந்து பிராப்தத்தை அடைவதும் தவிர சரவஸ்மிக்கள் ஆகாரம் நித்திரைமைதுனம் பயம் முதலியதால் மேன்மையடைந்து மானிடருள் பூநூல் தரித்து திரிகால ஸ்நானம் செய்து பிக்ஷாகாரமுண்டு கௌபீனந் தரித்து கிருஷ்ணுசம் தண்டம் என்பவற்றை தாங்கி சிவாக்கினி பூசை செய்து வேதத்யானம் பண்ணிக் குடுமியோடு இருப்பவன் பிரம்மசாரி என்றும் பருவ திசையில் மனைவியை கூடி ஒழிந்த காலங்களில் தெய்வம் தென்புலத்தோர் விருந்தினர். யாசகர் சன்யாசி முதலியவர்களை உபசரித்து இல்லறத்தாரை சூழ்ந்து யாவருக்கும் கருணை புரிபவன் கிரகஸ்தன் எனுன்ம் சடாதாரியாய் வனசஞ்சாரத்தில் பாரி யோடு கூடி அத்தியானஞ் செய்து கந்தமூல ஆகாரங்களை யுண்டு மூன்று வேளையும் ஸ்நானஞ் செய்து வற்கலை யணிந்து வாழ்பவன் வானப் பிரஸ்தன் நிஷ்கள சிவத்தியானஞ் செய்து தண்டம் பஸ்பம் சடையுடையும் அக்கினியை கோத்திரம் சந்தானம் என்பவைகளையும் சர்வ காதல் கலையும் சதா சுகங்களையும் விடுத்து அப்பச்சிய அன்னந் தவிர்த்து சிவபோகஞ் செய்து தேக வசனத்திலேயே

சாயுச்சியத்தை அடைய விருப்பமுள்ளவனே சன்யாசியென நான்கு ஆச்சிரமாக தரித்துள்ளன. இம்மானிட வாக்கத்திற்கு தத்துவம் 96 உள்ளது. அதை விவரித்துக் கூற இடமின்றி விடுத்தனன்.

## பூர்வீகம் கவி

1. நலங்கூர்ம களிரிமையெனு
   நளிர்வாதியிற் கொக்கோகன்
   வலங்கூர்மதன் கலையென்னு
   மலைமந்திரத்தை நடுநிறுத்தி
   யிலங்கக்கடையே பேரின்ப
   மென்னுமமிர்தம் பிறந்ததனை
   துலங்குமிளைஞரெனுந்தேவா
   தூயத் தூங்காமப் பசித்தணிப்பார்

2. விதிமுன்னுளோர் வடமொழியால்
   விரித்தும் வகுத்தும் முறை முறையே
   துதிகொண்டிடச் சொல் காமநூ
   லதனை தொகுத்தான் கொக்கோகன்
   புதியவமிர்தமென வதனைப்
   புகன்றான் தமிழாற்புகழ்வழுதி
   மதிவேன் குடையோன் வரதுங்க
   ராமனென்னும் மன்னவனே


# கொக்கோக சொரூப சூசகம்

1. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தில் விளங்கும். உயிர்களில் மனிதர் அறிவிற் சிறந்த வராயினும் அவருடைய தக்க அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு வகையில் ப்ரமசரியம் இல்லறம் வானப்பிரஸ்தம் துறவறம் இன்ஞன்கு ஆசிரமங்களும் பொது வியல்பு நோக்கி இல்லறம் துறவறம் என இரண்டாகக் கொண்டனர்.

2. இவற்றுள் துறவறமானது அறம் பொருள் இன்பங்களை அநித்தியமானது துறந்து நித்திய மாகிய வீட்டைஅடையும் பொருட்டு யோக முயற்சி செய்வது.

3, யோக முயற்சியாவது இன்பம் நியாயம் ஆசனம் பராணுயாமம் பிரத்தியாகாரம் தியானம் சாரணை சமாதி முதலியவற்றை யனுசரித்து ஜலத் திலும் பனியிலும் மழையிலும் வெய்யிலிலும் வருந்தி கந்தமூல பலாதிகளைப் புசித்து தேகத்தை மெலித்து பிராண வாயுவை வருந்தி கண்டம் இதயம் நெற்றி கபாலம் நாபி இவைகளொன்றிற் கந்தக சிஞ்சை வைத்து ஐம்புலமடக்கி துன்பப்படுவது.

4. ஆயினும் இதனுல் அவ்வீட்டை யடைதல் மிகவும் கடினம். ஏனெனில் இவ்வரிய அனுஷ்டா



னத்தில் யாதாமோரு காரணத்தால் மனே சஞ்சல்லியமுண்டாயின் இதனுலடைவோ மென்று நம்பியிருந்த வீட்டையுமிழப்பர் பந்திக்கப்பட்ட பிராண வாயுவை நெறி மயங்கி வெளிபடுகையில் சக்கரத்தை ஊர்த்துவ முகத்திலெம்பித் தரையில்

மோதுவதும் கபாலம் வெடிப்பதும் கண்கள் பிதுங்கு வதும் நாவின் வலி குறைந்து குதலைச் சொல்லா வதும் வயிறு கிழிவதுமாகிய இழிவுகளை அடை வார்கள்.

5. இவ்வாறு வறுத்தமுறுந் துறவ ரத்தைப் பார்க்கிலும் இல்லறத்தால் இகத்திலும் லோகாந்திரத் திலும் அறம் பொருள் வீடாகிய நித்தியானந்தத்தை யும் எளிதில் அடையலாம் என்பது பற்றியே இல்லறம் மற்றவைகளிற் சிறந்ததென பெரியோ ருரைத்த உபமானங்கள் பற்பல வுண்டு.

6. இல்லறமல்லது நல்லறமன்று என ஔவை யார் உறைத்தபடி துறவறத்தாலடையக் கூடாது ஜீவன் முக்தியும் இல்லறத்தில் இளமையில் எளிதில் அடையலாமென்று கைவல்லிய வேதாந்த சாஸ்தி ரங்கள் சொல்லி தனமென்பது சகல சாஸ்திர சம்மத மாகவும் கொள்ள வேண்டியது.

7. ஒருவன் செல்வத்தால் எவ்வளவு பெருமை யை யுடையவனு யிருக்கினும் நற்குண செய்கையை யுடையவனு யிருக்கவேண்டும். அதற்கு அனங்காக மத்தைப் பார்க்கிலும் முக்கிய சாதன மொன்று மில்லை.

8. உலகத்துயிர்களை ஆண் பெண் என இரு வகையாகப் படைத்து அவைகளின் உற்பத்தி

குறிய புணர்ச்சியினிடத்து இன்பத்தையும் உண்டாக்கிய ஈஸ்வர சங்கற்பத்துக்கு மாறாகந் துறந்தாற் போல் இன்பத்தை யிகழ்ந்து கூறுவோர். அதனை மறுத்தவர்களல்லவென்று அவர்களுக்கே நன்றாக தெரியும்.


9. இவ்வின்பம் சகல வுயிர்களுக்கும் இயற்கையாயினும் அறிவாற் சிறந்த மனிதர் இன்பவிருப்புகளும் ஓர்ந்து உணர்ந்து புணராவிடின் இதற்கும் விலங்கின புணர்ச்சிக்கும் என்ன பேதம். ஆதலால் அறத்தையும் பொருளையும் தெளியும் பொருட்டு மனு முதலிய முனிவரவர் கூறியதர்ம சாஸ்திரங்கள் முதலியவைகளை யாவரும் ஏற்றுக் கொள்வதுபோல அப்புருஷார்த்தங்களில் ஒன்றாகிய இன்பத்தையும் விதி விளக்குகளறிந்து அனுபவிக்கும் பொருட்டு பல ரிஷிகளாற்கூறிய இந்நூலையும் ஏற்றுக்கொள்ளுதல் இல்லறத்தாருக்கு முதற் கடமை.

10, தவிர அதிக வேகமுற்ற குதிரையைக் கடிவாளத்தால் மிகப்படுத்தாமல் கெடுதியுறும் குதிரைப் பாகன்போல காமத்தால் பல மாதர்களுக்குள்ளதை மனதை விவேகத்தால் மிகப்படுத்தாமல் அதிக்கிரமித்துத் தேகவலிமையையும் கைப்பொருளையும் இழந்து மனையாள் முதலியோர் நிந்திக்கத் தக்க ரோகத் துன்பமுறும் பொருட்டன்றி. ஆனால் இவ்வாகமத்திற் கூறியவற்றின் இன்னபியல்பினை உடையாளென்று அவ்வியல்புக்குத் தக்க கலவி

யின்ன தென்றும் பகுத்தறிந்து ஸ்திரீகளிடத்தில் இன்பம் பயப்பிக்கின் இரண்டு கண்களின் பார்வை ஒரு பொருளிடத்து பொருத்துவது போல அவன் மனவேருமையும் உள்ளன்புள்ளவளாகவும் நாயகன் குறிப்பின் வழியொன்று மட்டும் நிற்பாள். அதனுல் பிதுர்கள் அகதிகள் சுற்றத்தார்கள். நற்செயல் என்பனவற்றோடு உபசரித்து மகிழ்வித்தல் முதலிய இகபரசாதகமான இல்லறங்களை வழுவின்றி நடத்தும் பொருட்டேன கொள்க.

## ருதுகால சந்தான விபரம்

அன்றியும் மாதர்கள் ரஜஸ்வலையான தின முதல் 16 நாள் வரைக்கும் புணர்ச்சிக்குறிய காலம் அவற்றுள் 7 நாள் புணர்ச்சிக்குறியன மற்ற பதிறு நாட்களும் நாயகி விரும்பினாலன்றி நாயகன் வலுவிற் புணரலாகாது. ஏனெனில் ரஜஸ்வலையான தினத்தில் புணரின் நாயகன் சண்டாளத்துவ தோஷத்தையுற்று நாசமதையும் அடைவான். இரண்டாம் நாள் புருஷனுக்கு பிரமத்தி தோஷமும் நாயகனுக்கு கிராம சண்டாளத்துவ தோஷமும் கர்பத்துக்கு நாசமும் பொருந்தும் நான்காம் நாள் சுகத் தையாயிருக்கினும் புணர்ச்சியில்



கர்பந்தரிக்கின் அது அற்ப ஆயுசாய் போகும் பூரண ஆயுசாயிருக்குமாயின் தரத்திலும் பிதாவின் சொத்

துக்கு நாசமும் உண்டாம் பதின்மூன்று பதிமூன்றும் நாட்களில் பிறக்கும் பெண் குலத்துக்கீனமான நடத்தையுள்ளவளாயும் துஷ்டையாயுமிருப்பாள் மற்ற எட்டு தினங்களில் ஒத்தை படை நாளிற் புணர பெண்ணாகவும் இரட்டை படை நாளிற் புணர ஆணாகவும் தரிக்கும் மிகுதி பதினான்கு தினங்களில் காப்பந்தரியாது. இவ்வித விளக்கு களைக் கவனித்து நடப்பவர்கள். நான்கு ஆசிரமங் களில் எதிலிருக்கினும் பிரமசாரிகளென்று பல சாஸ்திரங்களிலும் கூறுகின்றது,

## மதனாகிய கடவுள் துதி

கண்ணலன்றி வேம்பு நுகர் காமத்துரோகிகள் போற்
பிள்ளையொரு தெய்வத்தை பேசாமமே எந்நாளும்
சாற்றுவதுங் காமாலை சாதிப்பதுங் கரணம்
போற்றுவது காமனடிபோது

உலகை யடைத்த பிரமர் நாவில் சரஸ்வதியை யும் கடலை படைத்த மகாவிஷ்ணு மார்பில் லக்ஷிமி யையும் படியளக்குங் கர்த்தர் பரமசிவன் இடபாகத் தில் பார்வதியையும் வைத்து பிரயோகிப்பது பெரி யோனாகிய மன்மதன் புகழயென்றால் அவன் புகழின் மேன்மையை சொல்லக் கூடுமோ திருமாலின் புதல்வனாகிய மன்மதன் இரதியுடன் மருவுங்காலத்தில் அவன் செய்யும் ஆலிங்கனம் நகக்குறிகள் அறிய தாடனங்கள் சும்பனங்கள் இசைவாகிய கலவிகள் பற்குறிகள் இவற்றினால் உண்டாகும். இன்பம் பூலோகத்துப் புருடருடன்


என்னாலும் விடாது பொருந்துபெனக் கொள்க. இல் வாழ்க்கையில் மதுரமான கரும்பு போன்ற மடத்தை யின் இன்பத்தை விட்டு வேம்பு துறவறத்தில் வருந்துகின்ற காமத்துரோகிகள் போல ஏன் அலைய வேண்டும்.

உலகமெல்லாம் வேறொரு மன்னவர்க்கில்லாது தனிச் செங்கோல் செலுத்தியாண்டாலும் பிரகாசிக் கின்ற கிரீடமும் நவரத்தினம் இழைத்த ஆபரண மும் ஒளி பொருந்திய பட்டு பீதாம்பரமும் தரித்து குபேரன் போலளவில்லாத மிகுந்த செல்வத்தை அனுபவித்தாலும் மாதர்களின்பத்தை அனுபவிக் காமல் இழந்தாலும் மாதர்களின் பத்தை அனுபவிக் காமலிழந்த புருடர்கள் காலால் நடந்து காலங் கழிக் கின்ற பிணங்களென்பர் ஆனதால் உண்மையாக உள்ள குணங்களுக்கும் திரேக உருப்புகளுக்கும் தக்கபடி அமைந்த ஆண் பெண் நான்கு ஜாதி வகுப்புகளை அறிந்து திருமணம் புரிந்து இல் வாழ்க்கை நடத்தி வருவதே சுகம்.

புருஷரில் உத்தமம் மத்திமம் அதமம் அதமாதமம் என நான்கு வகை அதில் 1-வது வகுப்பு

# உத்தம ஜாதி புருஷர்கள் லட்சணங்கள்

வட்டமாக பருந்த சிரசும் மத்தியில் சுழியும் நீண்டு கருத்த மெல்லிய கூந்தலும் சிறிய முகமும் நான்கங்குல நெற்றியின் வலத்திலோர் சுழியும் கருத்த புருவத்தின் கடைசியிற் சாய்ந்தும் தாமரை இதழ்போல சிவந்த கண்களும் கடைக்கண் பார்வை யும் கண்ணிமையில் நெருங்கிய ரோமமும் தன்




உத்தமன்

விரல்களால் மூன்றங்குலமுள்ள நீண்ட மூக்கும் சிவந்த வாயும் வரிசை நெருங்கிய வெண்மை பொருந்திய பற்களும் நெருங்கிய கன்னமும் குறுகிய செவியும் அழகிய கண்டமும் உயர்ந்த தோள்களும் நீண்ட கைகளும் விரல்களால் இருபத்து நான்கு அங்குலமுள்ள மார்பும் விருக்கினில் ரேகையும் குடம் போலுள்ள தொந்தியும் தாழ்ந்த உந்தியும் ஆறு அங்குலமுள்ள நீண்ட கேசமும் ரோமமும் சுருண்டு உருண்ட தொடைகளும் குறுகிய கணுக் கால் நீண்ட விரல்களும் மெலிந்த தோலும் நடுத்தர உயரமும் அழகிய தாமரை மலர்வாசம் வீசும் தாதும் குறைந்த உணவும் நிறைந்த செல்வமும்

போகமும் அற்ப நித்திரையும் தணித்த குரலும் சங்கீத பிரியமும் அன்னியர் மனைவியை அன்னை யெனக் கருதி தன் சதியை மயக்கும் சாத்விகக் குணமும் மாதா பிதா குரு தெய்வம் இவர்களை மனு முறைப்படி மறவாமல் போற்றும் மகிமை பொருந்திய மனதும் இவ்வகை லக்ஷணங்கள் பொருந்திய ஆடவனை 1-வது உத்தம ஜாதி என்றும் முயல் சாதி புருடனென்றும் கூறுகின்றது.

## 2-வது மத்திம ஜாதி புருஷ லட்சணங்கள்


நீண்டும் குறுகிய சிரசும் மெலிதான பம்பை மயிரும் சந்திரனைப் போன்ற சுந்தரவதனம் தனது விரல்களால் மூன்றங்குல அகலமுள்ள நெற்றியும் உருண்டு வட்டமிட்ட கண்களும் நீண்ட நாசியும் சிறிய வாயும் விலகிய பற்களும் சிறுத்த கன்னமும் பருத்த செவியும் குருகி நீண்ட கழுத்தும் தாழ்ந்த தோள்களும் பருமனான கைகளும் அகண்ட மார்பும் பூசணிக்காய் போல் உருண்ட தொந்தியும் உயர்ந்த உந்தியும் ஆமை நடையும் அளவிற் குறைந்த உணவும் குளிர்ந்த தேகமும் குயில் போல தொனி யும் இரவும் பகலும் சங்கீத பிரியமும் பசி தாளாமை யும் பாம்பின் உரக்கமும் தேவாலயத்தில் அதிற் பணி விடையும் விருந்தினர் இடத்தில் பொருமை யும் வேசியர்க்கீயா திறமையும் மனைவியின் மேல் மிகப் பிரியமும் மத்திய அளவுடைய கோபமும்





சுண்ணாம்பு போன்ற துவர்வாசம் வீசும். தோலும் வலிமையான தேகமும் இவ்வித லக்ஷணமும் பொருந்திய மனிதனை 2வது மத்திம ஜாதி என்றும் மான் ஜாதி புருஷனென்றும் மநு முதலியோர் புகழ்ந்தனர்.

## 3-வது அதம ஜாதி புருஷ லட்சணங்கள்

சிரசு முகம் செவி வாய் உதடு பற்கள் முதலானது நீண்டு சுருங்கியும் கைகால் தோள் வயிறு வுந்தி இடுப்பு இவைகள் நேர்ந்தும்




கனத்த மூக்கும் நீண்ட நாக்கும் கோரை மயிரும் குடிபோல் பிரியமும் பெருந்திண்டி தின்னும் பலமுள்ள சரீரமும் பற்பல மாதரை மயக்க பார்க்க நற்பிரியமும் போகத்தில் இச்சையும் பெருமை யற்றவனும் பாவத்தில் பழக்கமும் பய மற்ற மனதும் பசிதாளாதவன் பகற் கொள்ளைக் காரன் கூச்சமில்லாதவன் கடுங்கோபக்காரன் வெட் கமற்றவன் வேசையர்க்குற்றவன் பக்தியற்றவன் பரம சண்டாளன் புறம் பேசித் திரியும் பொருமை யுள்ளவன் மந்தமடையும் மனகொப்பாததும் மனம் ஊக்கம் ஞானம் வீரம் தவம் தருமம் தானம் கல்வி கேள்வி என எட்டும் பொருந்திய அகங்காரங் கொண்ட இராசச குணமும் அதம அளவுடைய கோசமுமுடைய தஹணங்கள் பொருந்திய இவனை





ரை
ாடி
ுக்க
யும்
பயு
ளக்
வட்
வன்
மை
னம்
ல்வி
ாரங்
டய
ஜை

3-வது அதம ஜாதியென்றும் ரிஷப ஜாதி புருஷன் என்றும் அன்பர்கள் கூறுகின்றனர்.

## 4-வது அதம ஜாதி புருஷ லக்ஷணங்கள்

அழகும் அந்தமுமில்லாத அனாகரீகமான நீண்டும் குறுகிய தலையும் குண்டு முகமும் கோரை பல்லும் மூக்குஞ்செவியும்மூஞ்செலிமுகமும் நாக்கும் கழுத்தும் நாய் போல் நீண்டும் மார்பும் வயிறும்



மகோதரன் போலும் வாயுதடும் வஞ்சக நெஞ்சமும் இடையும் தொடையும் எருமை போல் காதும் காலுங்கையும் கரடி போல் முகமும் பருத்த யானை போல் கருத்த தேகமும் கெட்ட நடத்தையும் கேவல ஸ்திரியும் எவளாலும் இணங்கிட வேண்டிய காமவெறியால் கலகப்பிரியமும் துன்மார்க்க வார்த்தையை பேணி நடக்கான் பரோபகாரன் பக்தியும் இல்லாதவன் கூச்சலிடுவான் குணங்கெட்டுத் திரிவான் தரித்திர திசையில் சஞ்சலங் கொள்வான் பெருந்திண்டி தின்னும் புலி நடையுடையயன் ஏக்கமும் தூக்கமும் இடையிடை பெருகும் காமக் குரோதம் உலோபம் மோகம் மதமாச்சரிய இடும்பை அலங்காரம் இந்த எட்டும் அறிந்தும் அறியாதவன் போல் நடக்கும் அற்ப மதியுள்ளவனும் புலால் நாற்றமுடைய தாதும் அதமாதம் அளவுள்ள கோசமும் உள்ள லட்சணமுடைய அவனை 4-வது அதம ஜாதியென்றும் அசுவ ஜாதி புருடனென்றும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

## நான்கு வித ஜாதி ஸ்திரிகளின் லட்சணமும் குணமும்


பத்மினி சித்தினி மகிர்ந்த சங்கினியிதமுறு
மத்தினியென்னும் நால்வரில்
முதலவளாத்தயி மற்ற மூவரும்
அதிக மற்றவரவரடை வுற்றாழ்வாரே

. பத்மினி சித்தினி சங்கினி அத்தினி என நான்கு வகை ஜாதியாக வகுக்கப்பட்ட மாதர்களில் முதலாகிய பத்மினி உத்தமி மற்ற மூவரில் பத்மினிக்கிச் சித்தினி தாழ்ந்தவள் சித்தினிக்கு சங்கினி தாழ்ந்தவள் சங்கினிக்கு அத்தினி தாழ்ந்தவள் என்றறியவும்.

# 1-வது பத்தினி ஜாதி பெண்ணின் லட்சணமும குணமும்

முன் செய்த பாவ புண்ணியத்தை பகுத்தறிந்து பிரம்ம தேவன் சிருஷ்டித்த பிறவிகளில் உத்தம ஜாதி பெண்ணின் அளவிற்குத் தகுந்த அழகிய சிரசும் நீண்டுங் கருத்த மெல்லிய கூந்தலும் சந்திரன் போன்ற சந்திரவதனமும் ஒளி பொருந்திய விசால நெற்றியும் பிறைபோல் குறுகி வளைந்த புருவமும் செவ்வரி பறந்த கண்களும் எள்ளினிளம்பு போன்ற அழகிய நாசியும் கொள்வைக் கனியை யொத்த சிவந்த வாயும் முத்துக்கள்போல் நெருங்கிய பற்களும் நீண்ட வலம்புரி சங்கை போன்ற கழுத்தும் உருண்ட தோளும் திரண்ட கைகளும் தன்கை விரலால் இருபது அங்குலமுள்ள தாழ்ந்த மார்பும் பொற் கிண்ணம் போல் அழகிய ஸ்தனமும் சிவந்த இடையும் துவண்ட தொடையும் இயற்கை யாயுள்ள நல்லவாசம் வீசும் மெல்லிய சரீரமும் சீவந்த மேனியும் அன்னத்தை பழிக்கும் நடையும் குயிலிலுமினிய கோகில தொனியும்சதாபக்தி சங்கீத பிரியமும் கோபமில்லாத குதலை வார்த்தையுங் தலை

போவதாயினும் பொய் பேச பயமும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கையுமுணர்ந்த நற் குணவதியும் புருஷனைத் தவிர பிறர் முகம் பார்க்க



பத்மினி


பிரியமில்லாத பெண்மணியாயும் மதுரமான பல காரமும் குளிர்ந்த பானங்களருந்தும் மதியுள்ள மாதும் சொற்ப போஜனமும் அற்ப நித்திரைக் கொள்ளும் ஆணழகியாயும் சந்தனம் பன்னீர் புனுகு சவ்வாது என்று சொல்லும் வாசனை வஸ்துக்கள் மேற் பிரியமும் வெண்ணிறமுள்ள வைரமும் வெண்மையான புஷ்பமும் வெள்ளை ஆடை அணி பவளும் அருணன் உதயமுன் அவள் கடன் முடித்து அளனை எழுப்பும் அறிவையும் மாமி மாமனுர் மற்ற

பெரியோரை வணங்கும் பரிசுத்த மனதும் புன்னகை பொருந்திய பார்வையும் சிறுத்து ஒடுங்கிய தேகமும் தாமரை மலர் வீசுஞ் சுரத நீருள்ள சதியும் இத்தனை லட்சணங்கள் பொருந்திய மாதரை முதல் வகுப்பு என்றும் பல நூல்களும் புகழ்ந்து போற்றுகின்றன

# 2-வது சித்தினி ஜாதி பெண்ணின் லட்சணமும குணமும்

சாதாரண அழகும் சலனமில்லாத மனமும் உண்மை வார்த்தையும் உத்தமி நடத்தையும் மாதா பிதா குரு தெய்வத்தை பேணி மலரடி தொழுவதில் மனமது மாறாள் பாலரைக் கண்டால் பால் பழம் தருவாள். கற்டைக் காக்கும் தனகுணவதியாம் கயவரைக் கண்டால் கடுர கோபமும் சுருட்டை மயிரும் சிவந்த மேனியும் மானிடர் மயங்கும்மை விழி பார்வையும் சென்னிறம் போன்ற சிறிய அதரமும் திருரேகை வீழ்ந்த திரண்ட கெண்டமும் குண்டு போல் கொங்கையும் குறுகிய தொந்தியும் திரண்ட தொடைகளும் செம்பொற்பாதமும் அன்ன நடையும் அமிர்த மொழியும் புளிப்புப் பதார்த்தமும் புலாலுண்ண பிரியமும் ஆலிங்கனத்தில் அதிக ஆவலும் போஜன மற்பமும் நித்திரை சொற்பமும் விசித்திர வஸ்திரமும் வாசனை சமாஸ்தும் பூசிட மோகம் பொருள்களை தியாகம் பண்ணும் நல்லு

டையாள் பிறர் முகம் பாராள் சரசமாடாள் சன் மார்க்கமுடையாள் பதிவரக் கண்டால் பணிந் தெதிற்குந்தாள் நல்லோர் நேசமும் நயந்த வாக்கும்




சித்தினி

புன்னகைக் கொண்டு பொறுமையாய் நிற்பாள். நடுத்தர உயரமும் நாணய வார்த்தையும் முகமல ரோடு முதற் சாமத்தில் கணவனைக் கூட கவனமும் கொள்வாள். தோகையின் தாது துர்வாசனையும் இவ்வித லக்ஷணங்கள் பெண்களை 2-வது வகுப் பென்றும் மத்திமஜாதி பெண்ணென்றும் பெரியோர் கள் புகழ்ந்து கூறுகின்றனர்.

# 3-வது சங்கினி ஜாதி பெண்ணின் லட்சணமும் குணமும்

குண்டு சிரசும் குறுகிய நெற்றியும் சாய்ந்த செவியும் அகண்ட மூக்கும் உயர்ந்த கன்னமும் கோணவாயும் குறுகிய கழுத்தும் பருத்த உதடும் சிறுத்த புயமும் சாய்ந்த மார்பும் சரிந்த கொங்கை





யும் பிள்ளையார்போல பருத்த கண்களும் கடைக் கண் பார்வையும் கற்றாழை நாற்றமும் சரீரம் நிரம்ப ரோமமும் சண்டாளக் கோபமும் விகசித நடையுங் வீரிடும் வார்த்தையும் வீட்டிலுள்ளோரிடமும் வீண்

சண்டை செய்தாலும் தவிர்க்கத் தக்க வேட்கை நீரும் அடக்கமில்லா அடங்காப் பிடாரியும் முறையின்றி கூடும் மூர்க்க குணமும் புருஷனை வெறுத்து பிறருடன் போவாள். தாமத குணமும் தருமமே தேடாள் ஆடவும் பாடவும் அதிகமாய்ப் பிரியம் தடி கொண்டடித்தும் தன் சுவைமாருள் உணவு அதிகம் உஷ்ண சரீரம் நல்லோருடனே நல்வார்த்தைப் பேசுவாள் பாவத்தைத் தேட பல பொருளீவாள் வாலிபருடன் வலியப் புணருவாள் காரப்பதார்த்தம் களிப்புடனுண்பவள் பொழுது விடிந்தும் படுக்கை விட்டெழுந்திராள் நித்திரைகள் அதிகம் நிஷ்டுரஞ் செய்வாள் உயரமும் அகலமும் விகாரமாய் காணும் சிவப்பு மனிதன் சிறப்பு ஆடை சிவப்பு புஷ்பம் சிவப்பு நகைகள் மூன்றாவது ஜாமத்தில் கூட மனமும் உவர் நாற்றமுள்ள சுரத நீரும் இவ்வித குணங்களமைந்த பெண்களை 3-வது வகுப்பென்றும் அதம ஜாதியென்றும் அறிந்த ஞானிகள் அறிவித்திகழ்ந்தனர்.

## 4-வது அத்தினி ஜாதி பெண்ணின் லட்சணமும் குணமும்

சறிய தலையும் செம்பட்டை மயருரும் சிறுத்த கழுத்தும் பருத்த தோளும் அகண்டவாயும் அழகிலா உதடும் நெடிய மார்பும் நீண்ட கொங்கையும் லட்சணமற்ற எருமை போல் வயிறுந் தாழ்ந்த குணமும் ஈனமானமில்லாதவளும் சிற்றின்ப செய்கையில் சிறப்புற்றவளும் கணவனை விட்டு

கள்ளனை கூடுவாள் பாவச் சொற்களை பலமுறைப் பேசுவாள் அச்சமின்றி ஆடிட வருவாள்தான் கொண்ட கருத்தை தக்ஷணம் முடிப்பாள் தண்டு




பஜாரியாய் தலை விரித்தாடுவாள் உப்பும் காரமும் உறைக்கவே உண்பாள் பேய் போல் வீட்டில் பெருந் திண்டி யுண்பாள் அல்லும் பகலும் அதிக நித்திரை யும் வர்ணப்பூசேலை நகைகள் மேல் பிரியமும் மந்த புத்தியும் மனவழுத்தமும் பொருள் சேராமையும் தரித்திர திசையும் விரத நாட்களில் 2-வது ஜாமத் தில் கூட பிரியமுள்ளவணாவும் கொடிய பிணிக் கொண்ட அமுதமும் துர்நாற்றமுள்ள சுரத நீரும்

இவ்வித குணங்களமைந்த பெண்களை 4-வது வகுப்பு என்றும் அதம ஜாதி பெண்ணென்றும் அனேக நூல்களில் கூறுகின்றது.

## சதிபதி பொருத்தம்

முயல் ஜாதி ஆடவன் பத்தினி ஜாதி பெண்ணை மான் ஜாதி ஆடவன் சித்தினி ஜாதி பெண்ணையும் ரிஷப ஜாதி ஆடவன் சிங்கினி ஜாதி பெண்ணையும் அஸ்வினிஜாதி ஆடவன் அத்தினி ஜாதி பெண்ணையும் அடைவது உத்தமம்.

## மருவுங்காலமும் கரணமும்

நான்கு வகைப் பெண்களுடைய குணமும் மண விருப்பமும் அடையாளமும் செய்கையும் தெளிவாக மூந்தியே சொல்லி இருக்கின்றது. இனி அவர்களை புணர்தற்குரிய காலமும் அந்தந்த சாதிக்கேற்ற கலவியும் சொல்வதைக் கவனிப்பீராக.

1. நான்கு ஜாதியில் முதலாவதாகிய பத்மினியைக் கூறுவதற்கு நன்மை விடியற்காலமும் சாயங்காலமும் இரண்டு சந்தியா காலங்களிலும் சேரலாகும் சுபம்.

2. தசமி பஞ்சமி துதியை அஷ்டமி சதுர்த்தி துவாதசி ஏகாதசி ஆகிய 7 திதிகளில் காலை முதற் ஜாமமும் இரவில் முதற் ஜாமமும் சித்தினியை மருவுதல் நன்று.

3. பிரதமை திரியோதசிதிதியை இந்நான்கு திதிகளில் பகல் மூன்றாம் ஜாமத்திலும் சங்கினியை சேருதல் சுகம்,

4. சப்தமி அமாவாசை சதுர்த்தசி நவமி பூரணை இந்த ஐந்து திதிகளில் பகல் 2-வது ஜாமத்திலும் இரவு இரண்டாவது ஜாமத்திலும் அத்தினியைக் கூட உத்தமம்.

1. சாதிக்காயை வாழைக்கிழங்கின் சாறு விட்டரைத்து உருண்டை செய்து தன் உமிழ் நீரில் நனைத்து பாக்கு வெத்திலையில் கொடுக்க சித்தினி பெண் வசியமாம்.

2. வில்வப்பழத்தை ஓடு நீக்கியானை வணங்கி பூண்டின் சாறு விட்டரைத்து உருண்டை செய்து தன் சிறுநீரில் நனைத்து பாக்கு வெற்றிலையில் கலந்து கொடுக்க சங்கினி ஜாதிப் பெண் வசியமாம்,

3. மாடப்புருவின் பிச்சையும் சலத்தில் சுழலுகின்ற வரிவண்டையும் சுட்டு கொசுவின் தேனிலரைத்து உருண்டை செய்து தன் வியர்வை நீரில் நனைத்து பாக்கு வெற்றிலையில் கொடுக்க அத்தினி சாதிப் பெண் வசியமாம்.

4. உத்தமியாகிய பத்தினியை வசியம் செய்ய எவ்வித மருந்துமில்லை செய்யுங் கலவியினாலேயே பிரீதியுண்டாய் வசியமாவாள்.

கஸ்தூரம் புனுகு சந்தனம் அகில் சடாமாஞ்சி நன்னாரி முத்தக்காசு ஓரிதழ் தாமரை வேர் பேய் சுரையின் தோல் குன்றிவேர் சேர்த்தரைத்து பூசிச் செல்ல வசியமாவாள்.

விழுது இலையின் வேர் அரிதாரம் வெள்ளை கவாளம் கஸ்தூரம் வழுதலாம் பழரசம் தேன் வார்த்தரைத்து கலக்கிப் பாதத்தில் பூசிக்கொண்டு புணரில் என்னாளும் பிரியாள்.

நல்ல பாம்பின் தலையின் பிச்சும் சாரணைச் சாரு தாமரைவேர் கண்பீளை முக்கரு வெந்நீர் விட்டரைத்து விந்து சேர்த்து அன்னபானங்களில் உள்ளுக்குக் கொடுக்க வசியம்.

இடது தொடையில் அட்டை விட்டு அது விழுந்த பின்பு உலர்த்தி சாம்பலாக்கி விந்து சேர்த்தரைத்து அறுசுவை பதார்த்தங்களில் சேர்த்துக் கொடுக்க வசியமாவாள்.

கவதும்பைச்சாறு கையாந்தகரைச்சார் மருதம் வேர்முல்லைப்பூ அசோகப்பூ தாமரைப்பூ மாம்பூ இதுகள் சேர்த்து அரைத்து தண்டில் பூசி புணர பிரியா மனமுடையவளாவாள்.

பிள்ளையின் லட்சணமும் குணங்களையுமறிந்து நல்லகுலத்து நங்கையாகவும் பிள்ளைக்கு பெண்சிறியவளாயும் உண்மை பேசும் உத்தமியாகவும் வரவுக்கு தக்க செலவு செய்பவளாகவும் முகமலர்ச்சியுள்ளவளாயும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு இன்னுன்கு

குணங்களுக்குள்ளவளா என பார்ப்பதோடு தாயைப் பார்த்துப் பெண்ணைக்கொள் தயிரைப் பார்த்துப் பசுவைக் கொள் என்றபடி பெண்ணின் தாய் தந்தை ஒழுக்க வழக்கமும் சண்டை முதலிய துர்குணங்களில்லாதவர்களா என அக்கம்பக்கம் விசாரித்து முதலிரண்டு ஜாதியாகிய பத்மினி சித்திணி அங்க அடையாள குணங்களறிந்து தக்க பருவத்தில் திருமணஞ் செய்வது மநுதரும நெறியாகும்.

இது போலவே சதிக்கும் பதியைத் தேடுபவர் பெண் மனத்திற்கும் வாழ்க்கைக்கும் கல்விக்கும் பொருந்திய காதலனா வரும்படி யுள்ளவனா குடும்பத்தை காப்பாற்றுந் திறமையுள்ளவனா நல்ல குடும்பத்தில் பிறந்தவனா பொய் சூது கொலை களவு சாந்தமுள்ளவனா என நன்கு உணர்ந்து சம்மந்தி இருவரும் மனமொத்து திருமணம் செய்வதால் மேற்படி சதிபதி இருவரும் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைவதும் தவிர குடிப்பழிப்பின்றி திடகாத்திர தேகமுடைய புதல்வரைப் பெற்று இல்லற தருமத்தை மேன்மையாக நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய ஜாதி பொருத்தமின்றி முறன்பாடாக பேர் ராசி கயிற்றுப் பொருத்தம் வயிற்று பொறுத்தம் அத்தை மகள் அம்மான் மகள் படித்தவர் பணக்காரர் நெருங்கிய உறவினர் பழைய கால்வழியென பலவாருக பேசி மணமுடிப்பது காதலின்ப வாழ்க்கையல்ல பெண்ணும் புருஷனும் மனமொத்து

வாழாமல் ஏறு மாறாகத் தங்களின்ப வாழ்க்கையை இழந்து விடுவது ஜாதி லட்சணங்களையறியாமையா லென்றறிக இவர்கள் வாழ்க்கை குதிரை கொம்பாக முடியும் இவையாவையும் பெரியோர்களறிந்து மண முடிப்பது உத்தமம்.

## விவாகப் பெயர்கள்

மணம் திருமணம் வதுவை விவாகம் மன்றல் கடிமனம் கலியாணம் கல்யாணம் எனப்பல பெயர் கொண்டது, 8 விதமாகச் சுருதியில் கூறுகின்றன அவையாவன:—

1. பிராமண வேதமோதி நல்ல ஒழுக்கமுள்ள பிரமசாரிக்கு தன் பெண்ணை தானஞ் செய்வது.

2. தெய்வம் யாகத்தின் முன் புரோகிதனுக்கு தன் பெண்ணை தானஞ் செய்வது.

3. ஆசிரியரிடம் பெண்ணையும் பசுவையும் தானஞ் செய்வது.

4. பிரஜாத்தியும் பிரமசாரிக்கு பெண்ணை தானஞ் செய்வது.

5. அசுரம் பெண் வீட்டாருக்கு பணங் கொடுத்து பெண்ணை கொள்வது.

6. காந்தர்வம் ஒருவர் சகாயமின்றி ஆணும் பெண்ணும் சம்மதித்து சுகிப்பது.

7. இராக்ஷதம் துராகரமாக பெண்ணை களவாடி களிப்பது.

8. பைசாசம் பெண் உறங்குகையிலும் குடியில் மயங்கியவளையும் பைத்தியம் பிடித்தவளையும் வலியக் கூடும்.

இந்த எட்டு வகையிலும முன் கூறிய 5 விவாகமும் உத்தமம் பின் கூறிய 3-ம் அதம விவாகமென கூறப்பட்டது.

13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

## மனைவியின்-மகிமை

புருஷன் சாந்தம் பொருமை இரக்கம் என்பதில்லாமல் அற்ப குணங்களையும் ஆதாரமாகக்கொண்டு எந்த சங்கடத்தை விளைவித்து ஊருடன் பகைத்திருப்பவனானாலும் நீச்சமாக முதலிரண்டு ஜாதிப் பெண்களை மணஞ்செய்து வந்தபின் முன்பிருந்த துர்குணங்களை அறவே யொழித்து சன்மார்க்கமுள்ள பெரியோர்களுடன் பழகி புண்ணிய புருஷன் என்றும் நற்பெயர் பெற்று குடும்பமும் நாளுக்குநாள் விருத்தியடைந்து யாவரும் மதிக்கத் தக்க பெருந் தன்மையாய் விளங்குவது பாணி பிடிப்பவள் பாக்கியமன்றறிக.

## மாதர்கள் மிதபோக கால விளக்கம்

தற்போது நம் தாய்நாட்டில் வசிப்பவர்களில் அநேகர் இராப்பகல் இந்த இரண்டு காலங்களிலும் நினைத்தபோதெல்லாம் போகஞ் செய்வதாக கேள்வி அது மிகவும் பிசகு பகல் போகமே கூடாமை.

அதனாலனேக தீங்குகள் நேர்வதோடுங்கூட வீரத் தன்மையற்று அற்ப ஆயுள் பிள்ளையாக பிறந்து இடையிடையே அபாய கஷ்ட நஷ்டங்களடைந்து காடிய பாபியாகியும் முடிவில் பிச்சை எடுக்குந் தன்மை யுள்ளவனுய் அதிசீக்கிரத்தில் கூற்றுவனுக் கிரையாவானென பல நூல்களும் மொழிவதால் போகத்துக்குரிய காலம் இராக்காலமே யென்றறிக.

ஷ இரவிலும் கூட 8 மணிக்கு உணவருந்தி அது ஜீரணமான பின்பு 2-வது ஜாமத்தில் போகிப் பது உசிதம் அவ்வாறின்றி கூடுவதில் அக்கினி மந்தம் பேதி தலைவலி வயிற்றுப்பிசம் இவைகளுண் டாவது தவிர உணவு ஜீரணமாகாதபோது தரிக்கும் பிள்ளை அசுத்தவனகவும் கீழ் ஜாதி யானைப் போல் நடத்தையுள்ளவனுயுமிருப்பான் நிற்க பகல் ஜாமத் திலும் புணர்வது கூடாமையாகும் இரவு நடு இரண்டு ஜாமமே போக காலமென்றுணர்வாயாக.

நம்மை நஷ்டப்படுத்தும் வஸ்து நான்கு அவை யாவன ஆகாரம் மைத்துனம் நித்திரை பயம் இன்னுன்கிலும் மூக்கியமானவை ஆகாரம் மைதுனம் இவ்விரண்டில் முதன்மையானது மைதுனம், ஆதலால் இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதை வேண்டும் இல்லாவிட்டால் விந்து விட்டான் நொந்து கெட்டான் எனும் மூதுரைப்படி தேகம் அதிசீக்கிரத்தில் எமனுக்கிரையாகி விடும் முக்தியடைவதற்கு ஏதுவானது மானிட தேகமே தக்கதென்றும் வேறுவித எந்த உருவத்தாலும்

முக்தியடைவது அரிது என்றும் கூறுவதால் எவ்விதத்திலும் தேகத்தை நீடிக்கும் பொருட்டு பாதுகாத்தல் வேண்டும்.

## மாதம் எத்தனை நாள் மருவுவது என்றறிக

தற்சமயம் நாட்டிலனேகர் சதா காம இச்சை கொண்டு பாழுஞ்சூரியன் சீக்கிரமஸ்தமித்து இருள் வரவேயில்லையென்று ஏக்கங்கொண்டு நாள் தவருது போகித்து மயங்கி வாடி வதங்கி வலுவற்று வாழ் நாட்பெருக்கை வீணய் சுருக்கி மறுநாளிரவு வருமோ வராதோயென்று ஒருநாளிரவில் இருமூன்று தடவை போகித்து ஓடாய்ப் போவது ஒழுங்கீனமானது சாஸ்திர முறைப்படி மாதமொரு முறை போகி இரு முறை போகி மும்முறை யோகி, என்றிருப்பதால் கூடுமான வரையில் மனதை யடக்கி மாதமிரு முறை அல்லது மும்முறைக்கு அதிகப்படாமல் இருப்பது அறிஞர்கள் தன்மை.

## மிதமிஞ்சிய போகத்தால் வரும் கெடுதி

ஒருவன் அளவு கடந்து போகிப்பதால் அதிக விந்து வெளிப்படும். அதற்கு முதற் பொருளாகிய உதிரங் குறைத்து ஆதாரமாகிய ஜீவாக்கினி குறை யும். அதனல் சுபாவத் தொழில் கெட்டு கலகலத்து கெட்ட வியாதிகளில் கஷ்டப்பட நேரிடும். தவிர மனிதனுக்கு சுக்கிலமானது எல்லாவித அங்க

உருப்புக்குகளிலும் தசை எலும்பு ரத்தம் நரம்பு கொழுப்பு மூளை இதுகளுக்கு மேலான ஆதாரமாய் இருப்பதோடு கூட ஜீவமணியாகவும் விளங்குகின்றது. நம் தேக உதிரத்தில் சுத்த உதிரம் 30 துளிக்கு ஒரு துளி விந்து உண்டாகின்றது. ஒரு முறை வெளியாகும் விந்துக்கு எவ்வளவு உதிரம் குறைந்திருக்க வேண்டும். அதை அன்பர்கள் சிறிதும் உணர்வதில்லை ஒருமுறை வெளிப்படும் விந்துக்கே 60 துளி உதிரம் குறையுமானல் நிதம் 2. 3 தகுதி போகிப்பவர்களுக்கு எவ்வளவு உதிரம் குறையுமென்பதை அவரவர் தானே அறிய வேண்டும்.

போகத்துக்குறிய சதிபதி யிருவரும் இரவில் ஆகாரமுண்ட பின்பு சிறிது நேரம் உலாவி மஞ்சத்தின் மேல் நல்ல வாசமுள்ள மலர்களைத் தூவி அலங்கரித்து அதன் மேலிருவரும் அமர்ந்து பரிமள வாசனைத் தாம்பூலந் தரித்து பரிசுத்த மனதுடன் சர்வ வல்லமையுள்ள சர்வேசனை வணங்கி நல்ல சந்ததியை தந்தருளும்படி பிரார்த்தித்து வேறுவித ஞாபகமில்லாமல் சந்தோஷமாய் காமவிவகாரத்துக்குத் தகுதியான கதைகளை பேசி புருஷன் மனைவியின் முகத்தையும் தவிர வேறெதையும் பார்க்காமல் ஆலிங்கன முதலான செய்கையால் நாயகிக்கு மோகமுட்ட வேண்டும். அவ்வாறு மோகமுண்டானதற் கடையாளமாக கண்கள் சிவந்து சோர்வடையாமலும் வார்த்தை குளறியும் ஸ்தனங்கள் விம்மியும் பரவசமாக மயங்கி நாயகனை

ஆவலோடு அணையவரும் தருணத்தில் அதிக பிரியத்தோடுங் கூடி கலவியை முடித்து இருவரும் மர்ம ஸ்தானத்தை சுத்தி செய்து ஏதேனும் உட்கொள்ள பிரியமுண்டானல் காய்ச்சிய ஆவின் பாலில் சுத்தமான தேன் கலந்து சாப்பிட தமச்சூட்டோடுங் கூட தேகச் சூடுந்தணிந்து சரீரம் ஆரோக்கியமடைடவதோடு அழகும் பலமும் நன்னடத்தையும் தீர்க்காயுளுமுள்ள உத்தம புத்திர ரோற்பத்தி உண்டாகும்.

அவ்வாறின்றி கெட்ட மனதோடு சதியின் மனது ஒரு விதமும் பதியின் மனது ஒரு விதத்திலுமாய் வேறுபட்டு விகார தோற்றங்களை மனதில் எண்ணி கோபம் பயம் மயக்கம் கூச்சம் முதலிய துர்செய்கையோடு கூடுவாரானல் அவர்களுக்கு பலவீன அற்பாயுள் துர்நித்திய குரூரமான சந்ததியுண்டாகுமென கண்டிப்பாய் அறியவும்.

## போகத்திற்குறிய ஆயுள் விளக்கம்

நமது அனுபவத்தில் காணும் வரை சிலர் செல்வ செருக்காலும் மோகக் கெடுமையாலும் புருஷர்கள் பதினன்கு வயதுக்குள்ளாகவும் பெண்கள் பனிரெண்டு வயதிற்கு மேற்படாத முந்தியே போகத்துக்கு ஆரம்பித்து கருவடைந்து தேவாங்கு தேரை எலிக்குஞ்சு ஒணன் இவைகளைப் போன்ற துற்பல தேகமுள்ள பிள்ளைகளைப் பெற்று அதனல் சரீரம் சீர்கேடடைந்து அகாலமரணத்திற்கு ஆளாய்

விடுகிறார்கள். சிலருக்கு சந்ததியே உண்டாவ தில்லை. இதை யறிந்துதான் பெரியோர்கள் பிள்ளை வயது இருபத்திரண்டுக்கு மேற்பட்டு பெண்ணுக்கு பதினாறு வயதிற்கு பின்பும் திருமண முடித்து ஆசீர் வதித்து திதி நக்ஷத்திரம் மாதம் நாள் பார்த்து மங்களகரமாக வாழயெண்ணி சந்தோஷமனதுடன் எல்லோருங்கூடி சாந்தி முகூர்த்தம் செய்து ஆனந்தத்தால் உண்டாகும் பிள்ளைகள் அதிக பல சாலியாகவும் நோயில்லாமலும் நன்னடத்தை தெய்வஅருள் தீர்க்காயுளுடன் மிகவும் கீர்த்தி பெற்று வாழ்வார்களென்றும் முன்னோர்கள் கூறுகின்றனர்.

## போகத்திற்காகாத நக்ஷத்திர திதிகள்

அசுவினி பரணி கார்த்திகை மிருக சீரிடம் திருவாதிரை புனர்பூசம் ஆயில்யம் மகம் பூரம் சித்திரை விசாகம் கேட்டை பூராடம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் பூரட்டாதி உத்திரட்டாதி இந்த நக்ஷத்திரங்களிலும் அமாவாசை பௌர்ணமி பிரதமை சதுர்த்தி சஷ்டி அஷ்டமி ஏகாதசி திரயோ தசி சதுர்த்தசி இந்தத் திதிகளிலும் வாரத்தின் முந்தி யும் பிந்தியும் வருஷ மாதப் பிறப்பு யாத்திரை சூதக தினம் ஞாயிறு போன்ற கிழமைகளிலும் மாதர் போகங்கூடாதாம் ஏனெனில் மேற்கூடிய நாட்களில் கூடி கலந்து கருவமையும் பிள்ளைகள் கல்வி அறிவு ஒழுக்கம் ஞானமில்லாத மந்தபுத்தியுள்ளவர்களாயும் தீராத பிணி யடைந்து வம்ச விருத்தியில்லாமலும்

நாளுக்கு நாள் செல்வங் குறைந்து சீர்கேட்டை யடைந்து அதிக கஷ்டத்துக்குள்ளாவார்கள் என பிரகஸ்பதி மநு முதலிய பெரியோர்கள் கூறு கின்றனர்.

## கூடத்தகாத பேர்கள்

விதவை விழுப்புக்காரி வயது முதிர்ந்தவள் சினேகிதன் மனைவி குரு சீடன் பத்தினி விவாக மாகாத கன்னியர் வேசி தரித்திர அங்கரோகமுடை யவள் ஆணும் பெண்ணுமில்லாத அலிகள் கர்ப்பம் தரித்த மாதர்கள் ஆகிய இவர்களிடம் கூடுவது தவறென்றறிந்தும் மாயா மோகத்தாலும் நல்ல சமயத்தில் யார் வந்து விடுவார்களோ என்ற அச்சத் திலும் கருதரித்து விட்டால் மானம் போய் விடுமோயென்ற பயங்கரத்தாலும் திடுக்கிட்டு விந்து வெளியாகும் சமயத்தில் மாதரைவிட்டு நீங்க நேரிடு வதால் அவ்விந்து இந்திரியக் குழாயிலும் நீர் துவாரத்திலும் தங்கி நீரடைப்பு நீரெரிச்சல் அரை யாப்பு அண்டவாதம் கண்டமாலை கைகால் குடைவு குஷ்டம் சீழ்மேகம் முதலிய ரோகங்கள் பெருகி கஷ்டப்பட நேரிடுவதால் இவர்களிடம் தன் வயதிற்கு மேற்பட்ட வயது பெண்களிடமும் கிழவி களிடமும் போகஞ் செய்து நஞ்சுண்பதை யொக்கு மென்றறிக. ஏனெனில் மேற்கூறியவர்கள் அதமஸ் தான உற்கருவியான புருஷனுக்கு சகோதயமாகும் ஸ்கலித நேரங்களில் மாங்கனியை யுருஞ்சி ரசத்தை

இழுப்பது போல விந்து மொத்தத்தையும் இழுத்துக் கொள்ளும் சுபாவ குணமுடையாரதலால் கண்ட வரிடத்தில் ஒரு போதும் புணர்ச்சியே கூடா தென்றறிக.

## மிதபோக விருத்தி

சில அன்பர்கள் இரவும் பகலும் இடைவிடாது மைதுனஞ் செய்வதால் சுக்கிலத்தின் வருவாய் குறைந்து தேகம் குன்றி அதிசீக்கிரத்தில் சீவன் போய் விடும். தவிரவும் மைதுனம் எந்த காலமும் இல்லாதிருப்பினும் ஊற்றுக் கேணியைப் போல் கேணுண்டு தாதுவின் தன்மை கெட்டு வருவாய டையப் பட்டு மிகுந்திருந்த சுக்கிலம் உஷ்ணத்தி னால் வற்றி தேகத்தைப் பாழ்படுத்தி உயிரை எம புரிக்கனுப்ப ஏதுவாகும். ஆனதால் அதிக போகத் தால் வரும் கெடுதியும் போகத்தை அறவே அடக்கு வதாலுண்டாகும் துன்பத்தையுமறிந்து போகத்தை அறவே யொழிக்காமல் மிதமாக நடந்துகொண்டால் சந்தானமும் குடும்ப விருத்தியும் உண்டாவதுடன் முக்தியடைவதற்கு ஏது உண்டாகி இகபரத்தில் வேண்டிய சுகத்துடன் வாழலாமென்றுணர் வீராக.

## மூவகை ஜாதி ஆண்களின் லட்சணங்கள்

1. முயற் ஜாதி ஆடவனானவன் செவ்வரி பரந்த கண்களும் வெண்மையுள்ள சிறிய பற்களும் பூரண சந்திரன் போன்ற முகமும் தாமரை மலரை

யொத்த கையும் சத்திய வாக்கும் பருத்த கழுத்தும் சூடான அன்னம் சொற்பமாகப் புசித்தலும் நல்லொழுக்கம் அற்பப் புணர்ச்சியும் தாமரை போன்ற வாசனையுள்ள தாது உள்ளவனாக காணப்படுவான்

2. ரிஷபச்சாதி ஆடவனானவன் அகன்ற நெற்றியும் உயர்ந்த தலையும் நீண்டும் பருத்த உதடும் சதையற்றும் பருத்தக் கழுத்தும் ஆமை முதுகுபோல் உயர்ந்து வட்டமாயிருக்கின்ற ஸ்தூல சரீரமு பருத்த தோளும் சிவந்த கண்களும் சாந்த குணமும் மதயானை போன்ற நடையும் பொறுமையும் பாம்புறக்கம் போன்ற நித்திரையும் பசிதாளாமையும் சுண்ணாம்பு போன்ற உவர் நாற்றமுள்ளவனாகக் காணப்படுவான்.

3, குதிரைச் சாதி ஆடவனானவன்செவி முகம் கழுத்து உதடு பல் இவைகள் நேர்ந்தும் விரலும் நகமும் காலும் அழகின்றி நீண்டும் வட்டமான கண்களும் அதிக உறக்கமும் துர்நாற்றம் பொருந்தி மிகவும் பெருகுகின்ற தாது உள்ளவனாக காணப்படுவான்.

## மூவகைசாதி பெண்களின் லக்ஷணம்

1. பெண்மான் சாதிப் பெண்ணானவள் சுருண்டு தெளிவோடிருக்கின்ற கூந்தலும் கொவ்வைக்கனி போன்ற வாயும் மான் மருண்ட பார்வை

யுள்ளவளும் பெண்யானை நடையும் மின்னற் கொடி போல் துவளுகின்ற இடையும் முனிவர்களும் மயங்கும்படியுள்ள பிரகாசமான முகமும் புணர்ச்சியில் மிகுந்த தெளிவும் தாமரை மலர் மணம் பொருந்திய காமசலமும் தாமரை யானை துதிக்கைப் போல் திரண்ட பருத்த தொடையும் அழகாயுயர்ந்த கொங்கையும் கொள்வாரிடத்தில் பொருமையும் அற்ப கோபமும் நீண்ட அழகு பெற கண்டமும் குதலை வார்த்தையும் அற்ப போஜனமும் சிவந்த மேனியும் உள்ளவளாய் காணப்படுவாள்.

2. பெட்டைக் குதிரை ஜாதி பெண் குவிந்தும் உயர்ந்துமுள்ள உச்சந் தலையும் நீண்ட கூந்தலும் பருத்து நீண்ட முகமும் தாமரை இதழ் போன்ற கண்களும் நெருங்காமல் இடைவெளி தோன்றிய வெண்பல்லும் நீண்டு சிவந்த உதடும் பெரிய தோளும் மிக பருத்த மார்பும் ஒடுங்கிய வயிறும் தொண்டையால் குழறிப் பேசும் வார்த்தையும் பணைத்துத் திரண்ட தொடைகளும் அன்னம் போன்ற நடையும் ஆழ்ந்த உந்திச் சுழியும் போஜண நிந்திரையில் பிரியமும் தன் நாயகன் மேல் நீங்காத சிந்தையும் செம்பஞ்சுபோல் சிவந்த பாதமும் பொன்னிறமுள்ள சரீரமுடையவளாக காணப்படுவாள்.

3. பிடியானை ஜாதிப் பெண் நெற்றி கன்னம் செவி மூக்கு இவைகள் மிதமின்றி பருத்தும் குறுகி பருத்த கைகளும் கெட்டியான தோள்களும் விம்மிய கழுத்தும் நெருக்கமில்லாத சாதாரண பல்லும்

கந்தையாய் சிவந்து சுருண்டிருக்கும் கூந்தலும் இராப் பகல் கல்வியில் மிக்க கவனமும் யானை வீரிடுவதை யொத்த வார்த்தையும் பருத்து தொங்கிய உதடும் வீண் சண்டை செய்பவளும் ஒளி குறைந்த கண்களும் முறையின்றி யாவரோடுங் கூடுதலும் ஆகிய இத்தன்மையுடையவளாகக் காணப்படுவாள்.

## ஸ்ரீகளின் பருவப் பெயர்

பெண்களுக்கு பாலை தருணி பிரௌடை விருத்தை என நான்கு பருவமுண்டு அதில் 1 முதல் 16 வயது வரை பாலையென்றும் 17-க்கு மேல் 30 வயது வரை தருணியென்றும் 31-க்கு மேல் 55 வயது பிரௌடையென்றும் 56-க்கு மேல் விருத்தையென்றும் ஏற்பட்டுள்ளன. இவர்களில் பாலைப் பருவப் பெண்களை ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகை மாதங்களிலும் தருணிப் பருவப் பெண்களை மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களிலும் பிரௌடையென்னும் பெண்களை சித்திரை வைகாசி ஆவணி புரட்டாசி இம்மாதங்களிலும் இனிய கனி வர்க்கங்களை அருந்தச் செய்து மனக்களிப்போடு சாஸ்திர விதிப்படி சம்போகம் செய்தால் பிரியா அன்பும் இடையரு இச்சையும் என்னாளும் பிரியமாயிருப்பார்கள். 55 வயதுள்ள விருத்தையைச் சேர்வது விழலுக்கிரைத்த நீர் போலாகும். ஆதலால் அவளிடம் இணங்காமலிருப்பது உத்தமம்.

## ஏழுவகைக் பெண்களின் பருவப்பெயர்

பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம் பெண்-என 7-வகை என்பது.

## ஏழுவகைப் பெண்களுக்கு அமுதநிலை நிற்குமிடம்

பேதைக்கு உச்சி பெதும்பைக்கு நெற்றி மடந்தைக்கு உதடு மங்கைக்கு பிடரி அரிவைக்கு கன்னம் தெரிவைக்கு குய்யம் பேரிளம்பெண்ணுக்கு அல்குல் இந்த ஸ்தானங்களில் ஏதேதோ காலமும் அமுதம் நிற்கும்.

## முன்னிரண்டும் கடையொன்றும் நீக்கி மற்ற நால்வரைக்கூடும் வகை

மங்கைப் பருவப்பெண்ணை அன்பாகப் பேசி பால்பழமுண்டு சந்தோஷப்படுத்தி உதட்டைக் கடித்துச் சேர பிரியா மனமுடையவளாயிருப்பாள்,

மடந்தைப் பருவப்பெண்ணை மனமகிழப் பேசி பரிமள வாசனை திரவியம் பூசி பிடரி தோள் வயிறு உந்தி இவற்றை தாடனஞ்செய்து கூட பிரியமுண்டாகும்.

அறிவையைய் வாசனை மலர்கள் மார்ப்போடு அணைத்து கன்னத்தை முத்தமிட்டு சேர சந்தோஷம் உண்டாகும்.

தெரிவை யென்னும் பெண்ணை உயர்ந்த ஆபரணாதிகள் பூட்டி வாசனை மலர்கள் சூடி வெண் பஞ்சணையில் சுகிக்க வெகு பிரியத்துடன் வாழ்வாள்.

## மாதர் புணர்ச்சிக்குறிய நாள்

முதன் முதல் வெள்ளியில் கூடுவளானல், மன விருப்பத்துடன் சுற்றத்தாருடன் சுகமாக வாழ்வாள் சனி வாரம் பழியுந் துக்கமு முண்டாகும். ஞாயிறு இரக்கமின்மையும் உயிர் கொலையும் கீழ்மை குணமும் உண்டாகும். திங்கள் புத்தித் தெளிவும் மன மகிழ்ச்சியும் உள்ளவளாகவாழ்வாள். செவ்வாய் துக்கமும் வியாதியும் தரித்திரமும் அடைவாள் புதன் சீருஞ்சிறப்பும் தீட்சித்தமும் இனிமை யாயும் வாழ்வாள் வியாழன் சதிபதி இருவருங் கொண்ட நேசம் நீங்காமல் சுகமாய் வாழ்வாள் என அறியவும்.

## கருப்பச் சின்னங்கள்

உலகின் கண் மாதர்களுக்கு கருவுற் பத்தியான தை அறியும் குறிகள் யாதெனில் புணர்ச்சியில் அதிக விருப்பமும் தேகம் அருக்களித்து உஷ்ணம் நீங்கி குளிர்ச்சி தோன்றலும் மார்பில் நரம்புகள்

சுபாவத்தைவிட அதிக வெளிப்படையாகக் காணுதலும் கொங்கை புறங்கழுத்தும் விம்மியும் வன்மையாயும் நோயுண்டதாலும் நாபியைச் சுற்றி சுருக்கும் வயிற்றுப் புரட்டலும் கண்களின் அடி நிமை கருத்த சிறுநரம்பு பிரசாசமாயும் காணப்படும். இவ்வகையிலும் சந்தேகமிருந்தால் மாதரின் சிறுநீரை ஏற்று அதில் பூனைக் காஞ்சொரியிலையைப் போட்டு ஓரிரவு முழுவதும் வைத்து உதயத்தில் பார்வையிடுகையில் அவ்விலையில் செம்புள்ளி தோன்றுமாயின் கருதரிக்கவில்லை யென்று அதற்குத் தகுந்த பரிகாரம் தேடவும்.

## கர்ப்பத்தில் சிசுமரித்த சின்னங்கள்

நாயகியின் வயிற்றில் சிசு மரித்திருந்தால் மார்பு தளர்ந்தும் துவண்டும் நாபியைச் சுற்றிலுங் குளிர்ச்சியும் சிறுநீர் தடித்தும் அல்குல் குழம்பி மிகவும் துர்வாசனை யாயும் சிசுவின் அசைவு தோன்றுமலும் புசிக்கத்தகாத வஸ்துக்களை புசிக்க விருப்பமும் வாயில் சுவாசம் மிகவும் பிணவடி நாற்றமும் படுக்கையில் புரளும்போது சாய்கின்ற பக்கத்தில் ஈய குண்டுப்போல பளுவாக தோன்றலும் நித்திரை மயங்க திருக்கிடுதலும் வெந்நீரில் கையை நனைத்து கர்ப்பிணியின் வயிற்றின் மேல் வைக்கின் சிசு உயிருடன் இருக்குமாயின் அவ்வுஷ்ணத்தைப் பொறுக்காமல் கையை யகற்றுதலும் இவ்வித குறிகளை மருத்துவச்சி மிகவுஞ்ஜாக்கிரதையாக பார்ப்பது

மின்றி சிசு மரித்ததா இல்லையா சரியாக நிதானிப்பதற்கு இதனடியில் கூறப்படும். ஔஷதத்தை கொடுக்க உண்மை விளங்கும்.

அதாவது கால் புட்டி ஓயிட்டு ஓயின் சாராயங் காய்ச்சி அதில் அரை அவுன்ஸ் லவங்கப்பட்டை தூள் சேர்த்து உள்ளுக்கு கொடுக்க பிரசவவேதனைப் போல் உபத்திரவம் இருக்குமாயின் அசத்தியினுலேயே சிசு அசைவற்றிருக்கிறதேயன்றி சிசு மரிக்க வில்லையென்றறிக. ஔஷதத்தின் குணம் யாதெனில் சிசு மரிக்காமல் பலயீனமாயாவது வியாதியாக வாவதிருக்கின் உடனே வியாதியை நீக்க கருப் பிணிக்கு சுகமுண்டாக்கும்.

## மலட்டு சின்னங்களும் மருந்துகளும்

1. புணர்ச்சி காலத்தில் நாயகிக்கு தலை நோய் காணில் அவளுக்கு கருக்குழியிற் பாசி பற்றி விளக்க மற்றிருக்கு மென்றறிந்து அதற்குக் கோழி பீச்சம் பருத்தி பருப்பும் சமயிடையாக ஜலம் விட்டரைத்து அதை ருது ஸ்நான தினம் முதல் மூன்று தினம் வரையிலும் கடிதளத்தினுள்ளும் புறமும் தடவி நாயகனும் லேபனஞ்செய்து கொண்டு புணரில் கருப்பம் தரிக்கும் ஒரு வேளை பலியாவிடில் மூன்று குறுவளவும் இங்ஙனம் சொல்லியபடி புணரிற் பலன் உண்டாகும்.

2. புணர்ச்சியில் நாயகிக்கு சரீர முழுவதும் வலிக்குமாயின் கருக்குழியில் வாயு நிறைந்திருக்கு மெனக் கருதி இதற்கு எள்ளெண்ணெயில் 3 விராக னிடை காயத்தைச் சேர்த்துமத்தித்துச் சீலையிலூட்டி மூன்று திரியாகத் திரித்து முன்கூறிய காலத்தில் மூன்று தினம் ஒவ்வொரு திரியாய் மாற்றி நிகம்பத் தில் புகுத்தி வைப்பதுடன் இம்மருந்தை நாயகனும் தடவிக் கொண்டு புணரின் பலிதமாகும்.

3. புணர்ச்சியில் நெஞ்சுவலி காணுமாயின் கருக்குழியில் தசை துற்றிருக்குமென்றறிந்து அதற்கு திப்பிலி விராகனிடை 1, சூடம் விராகனிடை 3, கோழிபிச்சு 1 இம்மூன்றையும் அரைத்துமேற்கூறிய காலத்தில் இருவரும் தடவிப் புணரில் நன்மை பயக்கும்.

4. புணர்ச்சியில் முதுகு நோய் காணில் கருக் குழியில் கிருமி நிறைந்திருக்கும் என்றறிந்து அதற்கு இந்துப்பு அரிதாரம் காயம் வகைக்கு விராகனிடை 1 இவைகளை வெந்நீரில் அரைத்து மேற்கூறியபடி தடவி மூன்று தினம் புணர நிவிர்த்தியாகும்.

5. புணர்ச்சியில் கண்டசதை வலிக்கின்ற கருக்குழியில் உஷ்ணம் அதிகரித்த தென்றறிந்து அதற்குக் கடுக்காய்த் தோல் விராகனிடை 3 சர்க்கரை விராகனிடை 4 புனுகு விராகனிடை வீசம் இவைகளை அரைத்து மூன்று உருண்டை வீதம் அரைத்து மூன்றுருண்டை யாக்கி நாயகிக்கு மாத்திரம் உள்ளுக்குக் கொடுத்து குங்குமப்பூ

அதிமதுரம் நற்சீரகம்வகைக்கு விராகனிடை சமமாய் சேர்த்து பனி நீரிலரைத்து மேற்படி காலத்தில் இருவரும் பூசிப்புணர்ந்தால் உடனே தணியும்.

6. புணர்ச்சியில் நாயகி ஏப்பம் வரின் கரு ஸ்தானம் அதிக குளிர்ச்சியற்றதெனக் கருதி சவுக் காரக் கடுக்காய்த் தோல் நவாச்சாரம் இம்மூன்றும் சமயிடையாகச் சேர்த்து அரைத்துச் சீலையிலூட்டி மேற்கூறிய காலத்தில் கடிதளத்திற் புகுத்தி நாயக னும் தடவிப் புணர உடனே தீரும்.

7. கிரகதோஷத்தாலும் தெய்வ குற்றங்களா லும் கருத்தரியாது அதற்கு இந்த மருந்துகள் பயன் படாது. ஆதலால் இதை பெரியோர்களால் நிவர்த்திச் செய்து கொள்ள வேண்டும். மேற்கூறிய மருந்து வகைகள்சதி புருஷர்களிவருக்கும் மாதலால் அக்காலங்களில் கைப்பு புளிப்பு துவர்ப்புள்ள பதார்த் தங்களையும் குளிர்ந்த சலத்தையுஞ் சேர்க்க லாகாது.

8. இல்வாழ்க்கையில் அளவில்லாத சுகத்தை கொடுக்கின்ற அழகிய மடந்தையாது இன்பமிருக்க அதனை அனுபவித்து ஆனந்தமடையாமல் அது சிற்றின்பமென்று இகழ்ந்து விட்டும் பரலோகத்தில் முக்தியென்றும் பேரின்பமிருக்குகின்றது. அதனைப் பெற வேண்டுமென்று அறிவின்மையிலே சிலர்

நினைத்து துறவறத்தை யடைந்து தவத்தைச் செய்து சரீரத்தை வருத்துவர். அவர் எத்தன்மையரெனில் மிகுந்த தாகமுற்ற காலத்தில் கானல் நீரைக் கண்டு குளம் நிறைந்த சலமிருக்கின்றது. அதனை அருந்துவோமென்று நினைத்து தம்முடைய கைப்பாத்திரத்தில் இருக்கின்ற நல்ல கங்காசலத்தைக் கவிழ்ந்துவிட்டு ஓடி நாவறண்டு மாய் வரை ஒப்பாவார்,

## கர்ப்பந் தரித்தலின் குணங்கள்

பணம் படைத்த பாக்கியவான் வீட்டுப் பெண்கள் செல்வ மிகுதியால் உணவு முதலியதைக் குறைவின்றி உண்டு சரீரத்தை வருத்தப்படுத்தாமலும் வேலை செய்யாமல் நாளை ஓட்டி நடைப் பழக்கமில்லாததாலும் அவர்களுக்குப் பிள்ளைகள் அரிதாகி உண்டாகிறது. அப்படி தவறி உண்டானாலும் அது அற்ப ஆயுசாய்ப் போகிறது.

அது ஏனெனில் எளியவர் வீட்டுப் பெண்கள் பஞ்சக் கொடுமையால் சரிவர ஆகாரமின்றி வருத்தப்பட்டு சரீரத்திற்கு ஓய்வு கொடாமல் வேலை செய்து வருவதால் அவர்களுக்கு சந்ததி அதிகமாயும் ஆயுள் விர்த்தியாயுமுள்ள பிள்ளைகளாகப் பிறக்கின்றன. ஆனதால் சந்தான விருப்பமுள்ள மாதர்கள் வேலை செய்து சரீரம் வருந்தினால் வியர்வையுண்டாய் அசைவு முதலிய தொழிற்குரிய வலிமை அதிகரித்து ஜடராக்கினி தூண்டப்பட்டு சரீரம்

அதின் அவயங்களும் திடமுற்று கர்ப்புக் குலைவுஞ் சீவாதாரமான உதிரத்தைச் சரீரமுழுவதும் பரவச் செய்து ரத்த நரம்புகளை கெடுதியின்றி செவ்வைப் படுத்தி அதனுல் மனுஷ சுபாவத்திற்குரிய விருப்பம் சுகம் காமம் சந்தோஷம் உற்சாகமாகிய இக்குணங் கள் விருத்தியாவதுமன்றி பிள்ளை உண்டாவதற்கு வேலை செய்வது உசிதமென்று விவேகிகள் யாவருங் கூறுகின்றனர். ஆகையால் கருப்பமாக கோரும் மாதர்கள் வேலை செய்யாமலும் நடக்கப் பழகாமலும் சரீரத்தை வருத்தப்படாமலும் இருப்பது கருப்போற் பத்திற்கு விரோதமென அறிந்துநடத்தல்வேண்டும். அத்துடன் மாதர்கள் அடிக்கடி புணருதல் கூடாது அடிக்கடி புணர்ச்சி செய்வதால் கருவழிந்து அக் கருவை வளர்க்குஞ்சக்தியும் அற்று போகும் அதற்கு திருஷ்டாந்தமாக பணத்தாசை பிடித்து வரும் நபர் களிடம் மிகப் புணர்ச்சி செய்யும் விலை மாதருக்கு பிள்ளையுண்டவ தரிதாயிருப்பதும் நன்ருக விளங்கும் ஒரு மாதை நெடுநாள் பிரிவுற்ற கணவன் வந்த வுடன் புணர்ச்சியில் கருப்பந்தரிப்பதும் யாவருக்குந் தெரிந்த விஷயமே தவிரவும் புணர்ச்சிக் காலத்தில் பெண்களுக்கு துக்கம் பயம் ஆச்சரியம் முதலிய துண்டானுல் கருத்தரித்தலுக்கு மிகவும் விரோத மாவதுமன்றியுஞ் சதிபதிக்கு மனஒருமை உண்டா காது.

ஆண் பெண் புணர்ச்சியின் காலந்தவிர மற்றக் காலத்தில் தனித்தனியே படுக்க வேண்டும்.

ஏனெனில் நாயகியின் சுவாசம் நாயகனின் தேகத் தீற் பரிசிக்கின் பலயீனப்படுவானென்று குணவாகடத்தில் கூறுகின்றது.

## புணர்ச்சியிலியல்பு

1. ஸ்திரீயின் சந்தோஷகரமான குசமர்த்தனத்தால் வாதமும் அதரபானத்தால் பித்தமும் புணர்ச்சியாலே சிலேஷ்மமும் நீங்கும்.

2. தர்ம பத்தினியின் புணர்ச்சியால் தாது விர்த்தியும் திரிதோஷ அரமும் பாபநாசமும் தேக கட்டுப் குளிர்ச்சியும் வறுமையிற் சொர்க்கமும் உண்டாகும்.

3. வாலைப்பருவம் பெண்ணைப் புணரின் சற்று உஷ்ணமும் தீபனபுஷ்டியும் தேக வலிமையும் பரிசுத்தமான தேஜசும் உண்டாகும்.

4. யௌவனப் பருவமுடையவளின் சங்கமத்தால் பஞ்சேந்திரியங்களுக்கு இன்பமும் சௌக்கியமும் வாத பித்தங்களினுறுதியும் உண்டாகும்.

5. பிரௌடைப் பருவப்பெண்ணின் புணர்ச்சியால் ஞானமும் தீபனமும் காமமும் லகுவான புணர்ச்சியும் உண்டாகும் தாது அன்னப்பறவைப் போன்று நடக்கும்.

6. விருத்தையைப் புணரின் திரேகம் பல ஹீனப்படும்.

7. காமதுர ஸ்திரீயின் புணர்ச்சியால் மந்த புத்தியும் சோம்பலும் அக்கினி மந்தமும் ஆரோக்கிய சுகமும் வாதசாட்டியமும் எருமைக்கடாப் போன்ற நடையினுடையதாகவும் இருக்கும்.

8. அன்றியும் ஆனி ஆடி ஆவணி புரட்டாசி இந்நான்கு மாதங்களில் பக்ஷத்திற்கொரு தரமும் சித்திரை வைகாசி ஐப்பசி கார்த்திகை இந்நான்கு மாதங்களிலும் மூன்று தினத்துக்கொரு தரமும் மார்கழி தை மாசி பங்குனி இந்நான்கு மாதங்களில் காமமுறும் போதெல்லாம் புணரலாம்.

Cell: 8489774
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13. சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

## திதிப் புணர்ச்சி

1. முதற் பிரமையில் ஆடவர் மாதரைக் கூடும் போது கையினால் கழுத்தை யணைத்து உச்சியை மோந்து அதரபானஞ் செய்து பல்லினாலூன்றி கன்னத்தைச் சுவைத்து புளகமுண்டாகும் இரண்டு விலாப் புரங்களிலும் பின்புறத்திலுஞ் சத்தமுண்டாக நகத்தினாற்றட்டி அந்த நகத்தினால் அம்மாதர்கள் மந்தசீற்காரஞ் செய்து ஆனந்தமடைவார்கள்.

2. துவிதியையில் ஆடவர் மாதரை இறுகத் தழுவி கொங்கையைத் தொட்டு கூறிய நகக்குறி வைத்து கண் அதரம் கன்னம். இவைகளை வாயினாற் சுவைத்து இரு தோள்களைப் பிடித்து ரசித்தால் ஸ்திரீகளுக்கு இன்பநீர் உண்டாகும்.

3. திரிதியையில் பெண்களை நாயகன் ஒருகை யால் கழுத்தை யிறுகத் தழுவி இரண்டு ஸ்தனங் களிலும் ஓசையெழத் தட்டி பல நகக்குறிகள் காட்டி ஆரத்தழுவி வழுதபானஞ் செய்ய ஆனந்தமடை வார்கள்.

4, சதுர்த்தியில் பதியானவர் சதியின் இரண்டு தொடைகளிலும் இரண்டு கை மூலங்களிலும் கனைப்பு தோன்ற தோன்ற களிப்புடன் கூடுவதன்றி கனவிலும் மறவாள்.

5. பஞ்சமியில் ஆடவர் வலது கரத்தால் நாயகியின் கூந்தலைப் பிடித்து பின்னுக வளைத்து அதரபானஞ் செய்து மனங்குழையும்படி ஸ்தன முகத்தை சுவைத்து நாவினுற்றடவி புணர என்னுளும் மறவாள்.

6. சஷ்டியில் மாதரின் களிவாயமுதுண்டு நாபியில் புளகந்தோன்றும்படி அதற்குரிய தொழிலை செய்தால் மனமகிழ்ந்து கூடுவர்.

7. சப்தமியில் அதராமிர்தத்தை யருந்திக் கழுத்திலும் மார்பிலும் இரண்டு கன்னங்களிலும் காமவெள்ளம் கடுகில் பெருகும்.

8. அஷ்டமியில் பெண்ணின் கழுத்தைவிட்டு அணைத்து கொங்கையைப் புளகிக்கும்படி புணர
அணைத்து கொங்கையைப் புளகிக்கும்படி பற்றி

வாயினால் ஸ்தனத்தடியை சுவைத்து நாபியைக் கையினாற்றடவி அதரத்தை பல்லுறச் சுவைத்து இரண்டு அடி தொடைகளிலும் கையில் தடவச் சுகமுறக் கூடுவார்.

9. நவமியில் பெண்களை தழுவி அதரபாணம் பண்ணி நாபியை விரலினாற் சுற்றிக்குவிந்திருக்கும் கொங்கையைப் பற்றி கூட காமநீர் வெளிப்படும்.

10. தசமியில் மாதரின் அழகிய நெற்றியை வாயினாற் சுவைத்துக் கழுத்தில் நகத்தினாலழுத்தி கரிகர லீலை செய்து ஸ்தனத்தை யிறுகப்பற்றி சுவைத்து நகக்குறி வைத்து தொடையைத் தட்டி முதுகை கையினால் குத்திதாடனப் பண்ணிப் புளக மெழத்தடவி ஆசை யுண்டாக்கி அணைத்தால் அதிக பிரியத்துடனிருப்பாள்.

11. ஏகாதசியில் கழுத்தை ஒரு கையால அணைத்து நகக்குறி வைத்து வாயினிடத்தில் மாறி அதரபானம் பண்ணி மார்பினில் பல தரம் கை குவித்துத் தாடனஞ் செய்ய காமவெள்ளம் பெருகச் செய்து புணர்வர்.

12. துவாதசியில் மாதரைத் தழுவி கன்னத் தைச் சுவைத்து கண்களை மோந்து அதரத்தை பல்லூன்றி முகத்திற் வியர்வையும் உடலும் அடி துடையுங் புசிந்து ஒன்று பட்டுருகவுந் தழுவிப் புணர்வர்.

13. திரியோதசியில் மாதர்கள் கன்னத்தை வாயினால் குதப்பிச் சுவைத்து கழுத்தில் நகக்குறி வைத்து சீற்காரமுண்டாகப் புணர்க.

14. சதுர்த்தியில் கண்களை நாவினால் தடவி நகத்தினால் கீறி விரலினால் கர்கரலீலை செய்து கூடுவார்.

15. பூரணையில் அழகிய கழுத்தில் நகக்குறி தோன்றச் செய்து இடம் வலமாகச் சுற்றி பொருந்த தழுவி காமவெள்ளம் பாய்ந்தோடக் கூடுவர்.

இப்புணர்ச்சியில் விலக்கம் நக்கது ஏனெனில் பௌர்ணமியிலும் அமாவாசை தினமும் புணர்ச்சியை விரும்பினால் தேகம் பலகீனப்படும்.

## ஆண் சிசு அடையாளம்

கர்ப்பினியின் வலது ஸ்தனம் பருத்து அதில் வரும் பாலானது கலங்கலாகவும் இருப்பதுந் தவிர சிறுநீர் முன்னிருந்த வர்ணமாறி பல வர்ணமாக காணுவதுடன் சிசு வலது பக்கம் இருப்பதாகத் தோன்றுவதோடு எழுந்திருக்கையிலும் உட்காரும் போதும் வலது கையை ஊன்றுதலும் ஸ்தனத்தி லுள்ள பாலின் நீர் துளியை ஜலத்தில் விடமிதந் தாலும் இவ்வித அடையாளங்களைக் கொண்டு ஆண் சிசு என்றறியவும்.

# பெண் சிசு அடையாளம்

கர்ப்பிணி இடது ஸ்தனம் பெருத்து தேகத்தில் அதிக சோம்பல் கேவலமான தின்பண்டங்களில் அதிக பிரியம் அடிக்கடி பொய்ப்பசி தோன்றுதல் முகாரவிந்தவர்ண மாறி வேறு வர்ணமாறுதல் சிசு வானது இடபாரிசமாய் இருப்பதுபோல் தோன்றல் உட்காரும்போதும் எழுந்திருக்கும்போதும் அடிக்கடி இடது கையை ஊன்றுதல் ஆகிய இவ்வடையாளங் களால் பெண் சிசுவென்று அறிந்து கொள்ளவும்.

# ஆண் மலடு விபரம்

வித்துப் பாழேயன்றி நிலப்பாழ் கிடையாதது போல ஆண் மலடேயன்றி பெண்மலடே கிடையா தென்றபடி புழுத்தச் சொத்தை விதைகளை சத்துள்ள நிலத்தில் நட்டாலும் ஒன்றேனும் பயன்படாமற் பாழாய்ப் போகும் அதற்கொப்பாகவே தேகத்தில் சுத்த ரத்தமில்லாததாலும் தூலதேகத்தாலும் நெடு நாள் போக பழக்கமில்லாதலாலும் அஸ்தப் பிரயோகத்தாலும் சுக்கிலத்தில் உஷ்ணமானது அளவிற்கு அதிகமாகதாக்கி ஸ்திரீயின்சுரோணிதத் தோடு கூடிக் கருவையும் சக்தி இல்லாமை யாலும் விந்து கெட்டு துர்வாடையாக நிறங்கள் மாறுவதாலும் தாது நீத்தும் இளகியும் கடித்தும் அளவிற் கதிகமாயும் இருப்பதுடன் ஜாதி வகை

களில் சம்பந்தமில்லாததாலும் மோகம் குறைந்து நிதம்பம் ஆழமுள்ளதினாலும் ஆகிய இவ்வகை காரணங்களால் கருவமையாது மலடாவாரெனக் கூறுகின்றனர்.

# பெண் மலடு விபரம்

மாதர்களுக்கு இயற்கையிலேயே கருப்பை சினைப்பை இல்லாமையாலும் கருப்பையானது தன் னிலையை விட்டுப் பிரண்டிருப்பதாலும் கருக் கம லத்தின் வாயருகே இருக்கும் ஜவ்வு பிள வாதிருப்பதினாலும் சதை வளர்ந்து கருப்பையின் வாய் சுருங்கி யிருப்பதினாலும் சினைப்பையிலிருந்து கருப்பைக்கு சினைக்கருவை எடுத்து வந்து சேர்க்கும் சினைக்குழாயானது கிழிந்திருப்பதாலும் கருவமைந்த போது கள்ளத்தனமாய் மருந்திட்டு கருவைகரைத்து விடுவதாலும் கர்ப்பாசயத்தில் உஷ்ணம் அதிகப் பட்டு அதில் வந்தியங்கும் நாதமும் அதிகமாக உஷ்ணத்தில் அதனுடன் சேரும் நாயகன் விந்து வில் குளுர்ச்சியுண்டாகி வற்றிப்பின் தனக்குள்ள கருத்தரிக்கும் இயல்புயின்றி விடுகின்றது, இதுவல் லாமல் சூதக பந்தத்தாலும் மேக ரோகத்தாலும் பித்த சத்து அதிகரிப்பதாலும் கலவியில் அதிகமாய் ஈடுபடுவதாலும் கர்ப்பாசயத்தில் வந்தியங்கும் நாத விந்துவைச் சேர்க்காது கழித்துவிடும் இதற்கறிகுறியாக நாடிகள் படபடத்

தல் திமிர்முறித்தல்; கண்ணெறிவு அல்குல் வரக்ஷி மலம் ஜலம் கண் நாக்கு சருமம் இவை கருத்தல் நித்திரை பங்கம் வயிறாதல் அதிக பசி கைகால் அல்குல் இவை சோதித்தல் ஆகிய இவ்வித குணங்களால் கருவமையாமல் மலடாவா ரென முன்னோர் கூறுகின்றனர்.

## இன்னர் மலடென அறியும் விபரம்

1 ஆண் பெண் சிறு நீரை வெவ்வேறு பாத்திரத்தில் பிடித்து அதைப் பயிராக்கி வளர்க்கிற சுரக்கொடியில் தனித்தனியே ஐந்து நாள் வார்த்து வர எவர் நீர் விட்ட கொடி காய்ந்ததோ அவர் மலடென அறிய.

2 தனித்தனியே பாத்திரத்தில் கொஞ்சம் மொச்சை கொட்டையைப் போட்டு அதில் இருவருடைய சிறுநீரை தனித்தனியே ஊற்றி வர சில தினங்கழித்துப் பார்க்கும் போது யாருடைய நீர்விட்ட கொட்டை முளைக்க வில்லையோ அவர்களை மலடென அறியலாம்.

## முகக்குறி லக்ஷணம்

ஆடவன் சொலுற் காலை யவனையே
நாடி நோக்கிடில் நல்லெண்ணமில்லவன்
நாடி யேயவடன்னை நயந்திடிற்
கூடிதற் குறைவேது மில்லையே

(இ-ள்) ஒரு புருடன் செலுங்கால் அவனை விடாது பார்க்கக் கூடி மாது நல்லெண்ணமுள்ளவளன்று ஒரு புருடன் இனிப வசனம் பேசினாள். அவன் கூடுவதற்கு றையில்லை உடனே முடியும்.

தாளை நோக்கித் தனித்து நடந்தொரு
ஆளை நோக்கி அரைக் கண்ணாற் பார்ப்பவள்
ஏழைப் போவிருந் தேய்த்திடு வரடனைக்
கேள்வன கேட்கக் கெடுதி விளையுமே

(இ-ள்) தன் பாதத்தை நோக்கி நடந்து செல் லுவ் புருடரை கடைக்கண்ணாற் பார்த்து ஒன்றும் அறியாதவள் போல பாசாங்கு செய்யும் ஒருபெண்ணை திடீரென்றாருவன் கேட்கில் தன் மனதில் அவனைச் சேர வேணுமென்று ஆசையிருக்கினும் தான் குற்றமில்லாதவளென்று பிறருக்குத் தெரியவேனுமேன்று தன்னிஷ்டரிடமும் கணவரிடமும் சொல்லி கலகம் விளைவிப்பானென்றறிக.

தலைதனைக் கவிழ்ந்து செல்லுந்தையலாளுடனே சேர்வாள் பல்விதபசப்பிபேசும் கன்னியோ வெகு நாட்கள் செல்லும் கலவிக் கோஷமை போன்ற கன்னியுங் கருகி நிற்பாள்.

(இ ள்) திரையைப் பார்த்து நடக்கும் பெண் கேட்க சம்மதிக்கும் பேசும் போது பசப்பியும் கண் ரெட்டியும் பேசுபவள் கொஞ்சம் தாமதமாய் முடியும் சாதாரணமாய் பேசக் கன்னியோ றெடு நாட்செல்லு

ஊமை போல் ஒருவருடனும் பேசாமலிக்கிருறமாது எவரைச் சேருவோமென்னும் சவலையுடையவளாகவே இருப்பாள்

நண்பரைப் பார்த்தபோது நல்வினியுரைகளாடி
அன்புடன் கருதிச்சென்றால் அடிக்கடி திரும்பித்தன்னை
பண்யுடன் காட்டிவேறே பதிலுரைத் தட்டி பேசித்
தென்புடன் விளங்கும் பாவை திருட்டு நெஞ்சுடையா
யாளாடே

(இ-ள்) ஒரு புருஷனை கண்டபோது நல்ல இனிய வார்த்தை பேசி விசுவாசம் போல் பார்த்தும் எங்கேயாவது சென்றால் அடிக்கடி திரும்பிப் பார்த்தும் ஜாடை காட்ட யாருடனோ பேசுதல் போல் அதட்டிப் பேசி உறுதியுடன் திரியப்படமாட்டாது கபட நெஞ்சம் அவனைச் சேர வேணுமென்கிற மனமுடையவளென்றறியவும்

ஆடவன் தன்னைக்காணில் அகத்தினில்நுழைந்துப்பின்னுல்
நாடியே யவனை நோக்கும் நாயகி நிறத்தைக் கூறில்
முடவன் தனத்தை யாரும் முயங்கிடில் முனையுமாட்டாள்
கூடிய கணவன் பேசில் குறைந்திடா தன்புள்ளாளே

(இ-ள்) யாதமொரு புருடரைக் காணில் வீட்டிற்குள் சென்று அப்புருடன் தன்னைக்காணாமல் தான் பார்க்கும்படியான பெண்களின் திறத்தை ஆராயும் பக்ஷத்தில் கோபிக்காமலும் தன்னைக் கூடிய

ஆடவரிடம் நீங்காத பக்ஷமும் உள்ளவனாக இருப்பாள் என்ற அறிவும்.

கணவனோ குளத்தைக் கூறி சுலகலவெனலே பேசி
நினைவினில் மற்றோர் தன்னை நேரினில் பார்க்காததாக
மனதினில் வேறை வைத்தும் மதிப்பதிறா சிந்தையாது
மனைவி தள் மானங்காக்கு மனத்துளானாகுமன்றோ

(இ-ள்) தன் கணவனோடு உள்ள வார்த்தைகளை கலகலவென்று கொஞ்சி பேசிப் மற்றப் புருடர்கள் தன் முன்னிலையிலும் வந்தாலும் வேறே சிந்தையாக எதையோ நினைத்துக் கொண்டு மற்றப் புருடர் போவதில் தன் மானத்தைக் காப்பதிலேயே மிகுந்த காணிக்கையுடையவளாக மனத்திடத்தையுடையவளாகிக் கூடிய வரையில் கற்புடையவளாகவுமிருப்பாள் இதைப் பற்றி எவ்விதமாகிய மாதரையும் மயக்கும்மடி திருநீலகண்டம் ஆயிரத்திரு நீரில் கூறியிருப்பதால் இவ்விடம் விவரிக்கவில்லை.

தாயினைப்போலும் வார்த்தை கனையுனாத்ததிக நட்பு
மாபின மனதைப் போலும் மாதரிக்கின்ற பார்வை
நேயமும் பொற்புங்கற்பும் நேர்ந்துளாளாகையாலே
ஆய்திடா தவர்கடன் பாலாசையை வுரைக்கொணாது

(இள்) தாயைப் போல வார்த்தைப் பேசியும் அதிக விசுவாசம் பொய் சுபாவமாகவே யாருடனும்
ர்த்தையாடி யாவரையும் அன்பாய்க் காப்பாற்ற

மனமுடையவளாகவும் விசுவாசம் கற்பு அழகு இவை களையும் 8 அந்தஸ்தையுமுடைய பத்மினி மாதை ஒரு வன் திடீரென்று கலவிக்காக வினவுதல் அவனுக்கு நாசமா கும்படியாக சாபம் வரும் ஆகையால் பழகியே குண மறிந்து செய்ய வேண்டியது

# குறி அளவு

ஆடவருக்கும் பெண்ணுக்கும் குறியளவு வகுத் துக் கூறுமிடத்து உத்தம குணமுடையவர்களுக்கு நான்கு ஐந்து அங்குலமும் மத்தியகுணமுடையவர்களுக்கு ஏழு எட்டு ஒன்பதங்குலமும் அதம குணமுடையவர்களுக்கு பத்தி பதினொன்று பன்னிரண்டங்குலமும் இருக்குமென்று நூல்வல்லோர் கூறுகின்றனர் உத்தம அதமகுணங்களுக்கு தக்கதாக அங்குலபபேங்களை வகுத்துக் கூறிய லட்சணங் கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டுவரின் அவைகளைப் பகுத் தறிவதெவ்வாரென மயங்காமல் ஆடவரையும் மாதரை யுங் குறிப்பினால் நோக்கி அவர்களிடத்தில் மிகுதியாகத் தோன்றும் லட்சணங்களால் இன்ன ஜாதி என ஆராய்ந் தரிய வேண்டும்

# அங்குலி போகம்

தாமரை மொக்குப் போல் குவிந்தும் பிறை வட்ட மாகவும் மடிப்பு மடிப்பாகச் சேர்த்தும் எருமை நாக்கு

போலத் தடித்தும் மாதருக்கு நிதம்பம் நான்கு விதமாக இருக்கும் அவற்றின் விசாலம் ஒன்றுக்கொன்று முறையே குறைந்திருக்கும் முன் சொல்லிய நான்கில் தாமரை மொக்கு உத்தமம் பிறைபோன்றது மத்திமம் படிப்பு அதமம் எருமை நாக்கு போலுள்ளது அதமம் என்றறியவும்

## குறிலக்ஷணம்

ஆண்குறி நீளமுழமறிவை தன்குறி
மாண்புறு மாழமும் வகுத்துக் கூறிடக்
காண்டாகுமாறுயின் கணித்த வொன்பது
வேண்டும் ராறுமாம் விரலிற் கணக்கினே

(இ-ள்) ஆண்குறியின் நீளமும் பெண்குறியின் ஆழமும் தன் விரலில் அங்குல 4-9-12 ஆகும்

ஆணில் 6 அங்குலம் முயற்சாதி 9 அங்குலம் ரிஷப ஜாதி 12 அங்குலம் குதிரைச்சாதி எனவும் பெண்ணில் 6 அங்குலம் பெண்மான் சாதியும் 9 அங்குலம் பெண் குதிரைச் சாதியும் பிடியானைச் சாதியெனவுங் கூறுகின்றனர்

## சரமதம்

மான்சாதிப் பெண்ணுடன் முயல் சாதி ஆணும் பெட்டைக் குதிரைச் சாதிப் பெண்ணுடன் ரிஷப ஜாதி ஆண் கூடினால் ஒன்றிற் கொன்று அங்குல பேதமில்லாததால் மேற்கூறிய சமரதப் புணர்ச்சி

மூன்றும் உத்தமம் குறைந்த குறியினுடைய ஆடவன் அதிக ஆழமுள்ள குறியினையுடைய மாதருடன் கூடினால் அம்மாதர்க்கு விவகாரம் அடங்காதென்றறிக.

## இந்நூலினியல்பு

மாய்கையில் சிக்குண்டு போகமே பெரிதென எண்ணி மயங்கிக் கிடக்கும் மானிடர்கள் இம்மதன நூலின் விதிப்படி எந்த ஸ்தானத்தில் எந்தப் புறத்தொழில் செய்ய வேண்டுமா அதனைச் செய்து நாயகிகளை புணர்ந்திடில் ஒரு சந்திர காந்தப் பாவை போல பெண்கள் பரவசப்பட்டு உள்ள முறுகி காம வெள்ளத்தைப் பெருகுவாரென அறியவும்.

## அமுதநிலை

பெருவிரல் புயுந்தாளோடு பெரும்பாடணி முழந்தாள்
சருவிய குய்யமுந்தி மார்புமென் முலைக்கைம் மூலந்
திருவளர் கழுத்தினோரு கபோலம் வாய் செங்கணெற்றி
பெருவரு முச்சிளென் புகன்றமு வைத்திடம்

(இ-ள்) பெருவிரல், புறந்தாள், பரடு, முழந்தாள், அல்குல், நாபி, மார்பு, முலை, கைம்மூலம் கழுத்து, கபோலம், வாய், கண், நெற்றி, உச்சி இந்த 15 இடங்களிலும் அமுதம் நிற்கும்,

இடப்புற மூதலாயேனும் வளர்பிறை கென்னலாகுந்
தடுப்புரும் வவ்பக்கத்தில் தேய்பிறை தன்னிற்ருழ்வுற்
றடுக்குற விறங்குமாதர்க் கமுதென வல்லவர்பின்ன
ரெடுத்த தோர்விடம் மதன் மாமுதினுக் கோழாந்தனம்

(இ-ள்) மேலும் பூர்வ பட்சத்துப் பிரதமையுள்ள பூரணை வரையிலும் இடதுகாற் பெருவிரல் முதல் உச்சி

மட்டும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வோரிடத்தில் முறையே அமுதல் ஏறி நிற்கும் அமரபட்ச பிரதமை முதல் அமாவாசை வரையிலும் வலதுகரப் பெருவிரல் மட்டும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வோரிடத்திலும் இயங்கி நிற்கும் இப்படி அமுதம் நிற்கின்ற ஸ்தானத்துக்கு ஏழாம் ஸ்தானத்தில் விஷமிருக்கும் அந்த ஸ்தானத்தில் ஒரு தொழிலுஞ் செய்யலாகாது.

# அமுதநிலை ஸ்தானத்துக் குறியத்தொழில்

உச்சி மயிரை பின்னால் வாங்கி அவ்வுச்சியில் நகந் தரலூன்றி கோதுதல் (நகக்குறி)

நெற்றி கண் - கனிபோல் சுவைத்து நாவினாற் தடவுதல் (சும்பனம்)

வாய்-இதழைச் சுவைத்து நாவினாற் பல்லினால் தடவுதல் (சும்பனம் நகக்குறி)

கபோநம் - இனிய மாம்பழம் போல் சுவைத்திடல் (சும்பனம்)

கழுத்து கைமூலம் கனிபோலச் சுவைத்து பல்லினால் அழுத்தி நகத்தினாற் ஊன்றுதல் (சும்பனம்) தந்தக்குறி நகக்குறி)

ஸ்தனம் குழையும்படி பற்றிக் கண்ணை நேரிடுதல் )தாடனம்)

நெஞ்சு மார்பு கூறிய நகத்தாலூன்றி வாயினால்கௌவுதலும் இரண்டு கையும் சேர்த்து அகங்கை தாடனம்( புறங்கை தாடனம் முறையே செய்தல் (நகக்குறி தாடனம்

நாபி-நாவினாலும் விரலினாலும் சுற்றுதல் (சும்பனம் தாடனம்).

நிதம்பம் யோனி லிங்கத்தைத் சுவைத்தல் நெருடுதல்.

முழந்தாள் புறந்தாள் பரடு காலின் பெருவிரல் இவைகளை கையினால் பிசைதல் (தாடனம்).

## கலவிக்குரிய மந்திரம்

ஆலிங்கனம் 5 சும்பனம் 1. ஆமுதநிலை 16 நகக்குறி 8 தந்தக்குறி 8, தாடனம் மத்தனம் 8 என எண் வகைகள்.

## ஆலிங்கனம் 5ன் விபரம்

1-வது கழுத்து யணைத்து மார்பமூழ்ந்த கொடி போலச் சுற்றித் தழுவுதல். 2-வது தொடை மேல் காலையூன்றி கழுத்தையும் முதுகையுங் கட்டிக் கொண்டு மரமேறுவது போல தழுவுதல். 3-வது நெல்லுக்குள் அரிசியைப்போல ஒருமித்து தழுவுதல். 5-வது தொடைகளாலிருக்கி மார்போடு மார்பு வைத்து தழுவுதல்.

## சும்பனம் 11ன் விபரம்

சுவைத்தல் துடித்தல் ஒன்றுதலிரண்டும் கபடமுநிற்றல் விலகியிருத்தல் சுற்றுதல் மேலுந்துதல் உயர்ந்த சம்புடாதிகள் பதினொன்றும் பிறவும் விழி கபோலம் ஸ்தனம் நெற்றி கைமூலம் நிதம்பம் இதழ்

உந்தி மார்பு முதலான உறுப்புகளை நாடி பலவிதமாக மாறி மாறி அமுத்தமுண்டல் சும்பனம் என்பது சப்புவது.

## நகக்குறி 8ன் விபரம்

கைமூலம் மார்பு தோள் பிடரி கழுத்து விலாபுறம் கபோலம் ஸ்தனம் கடிதளம் வாய் துடை முதலிய இடங்களில் நகத்தைப் பலவிதமாய் அந்தந்த ஸ்தானத்திற்கு தக்க மாதிரி நகத்தை வளைத்தும் எதிரெதிராக நகங்களை சேர்த்து மேற்கண்ட உறுப்புகளில் பொருத்தும்படி அழுத்துதல் வேண்டும் பலவிதமாக அமுத்துவதற்கு அர்த்த சந்திர மண்டலம் புலி நகம் மயூரபலம் முயலடி உற்பலம் எனப் பெயர்கள் வழங்கப்படும்.

## தந்தக்குறியின் விபரம்

சும்பனாதி ஸ்தானங்களில் விழியை நீக்கி மற்ற ஸ்தானங்களில் பற்களால் அழுத்திப் பற்குறி தோன்றும் வண்ணம் கடிப்பதற்கு தந்தக்குறி என்று பெயர். இவ்வித பற்குறி தோன்றியும் தோன்றாமலும் அந்த ஸ்தானத்தில் வைக்கும் குறிகள் மூஷிகம் அணுச்சூணகம் பிரவாளமணிபிந்து பிரவாணமாலை கோசல விதம் எனப் பலவித பெயர்கள் சொல்லப் பட்டது.

## குரல் எட்டின் விபரம்

மேற்கூறியபடி ஆலிங்கனம் சும்பனம் நகக்குறி தந்தக்குறி முதலியவைகள் செய்து வருங்கால்

தலைவி ஆசையில் மதிமயங்கி கண்கள் சிவந்தும் வார்த்தைக் குழறியும் பார்க்கும் மாரி மயில் புறா அன்னம் காடை கோழி குயில் சகோதரம் வண்டு ஆகிய எண் விதப்பட்ட குரலோசனைகளைக் காட்டி மோக வருகை தோன்ற தலைவனை இறுகத் தழுவ வருவதறிந்து தாடனம் செய்தல் வேண்டும்.

மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,

## தாடனம் அங்குலியோக காரணம்

உச்சி மார்பு ஸ்தனம் முதுகு கபோல நெற்றி தொடை முதலிய ஸ்தானங்களில் முறையே கைவிரல் குவித்துத் தடகில் மெல்லக்குத்தல் தர்ஜானியா லூன்றல் தர்ஜானியாலும் மத்திபத்தாலும் நெருக்கடி ஷெ விரல்களை மடக்கி பற்றிக் குறடு பிடித்தல் தர்ஜானியால் துருவுதல் முதலிய அகபுறத் தொழில் அங்குலியோகம் செய்தல் வேண்டும்.

சுரோணித சம்பந்தமாய் வாதுமை பிளவை போன்ற உச்சியில் லிங்கம் போன்ற தாடி ஒன்று தோன்றும் அதற்கு யோனி லிங்கமென்று பெயர் பெறும். இதுஸ்பரிசநரம்புகளால் நிரம்பப் பெற்றுள்ள தால் தேகம் புளகாங்கிதமடைந்து மிக்க இன்பத்தை ஊர்ஜிதப்படுத்தும் மறைவிடத்தில் கைவிரல் அழுத்தப்படுவதால் மனம் வெறுப்படையாமல் சுக போக சாரத்தில் மகிழ்ச்சி ஏற்படும். அவ்வகையே அகத்தொழில் நிறைவேற்ற வேண்டும். இவற்றுள் அங்குலியோகமே சிறந்ததாகும் அந்தியும் மாதர்

களுக்கு எந்தெந்த காலங்களில் எந்தெந்த விடத்தில் அமுதநிலையிருக்குமென்பதை யறிந்து அந்தந்த ஸ்தானத்துக்குரிய சும்பனம் நகக்குறி தாடனம் அங்குலியோக முதலியது செய்து அமுதத்தை தத்தம் இடத்தை விட்டெழச் செய்து முறையே லீலைகளைச் செய்து இருவர் விந்தும் ஒரே சமயத்தில் மகிழ்வதால் மனைவிக்கும் புருஷன் மீது அதிக அன்பு ஏற்பட கருவு பற்றி புத்திர சம்பத்து உண்டாவதுடன் புருஷன் வார்த்தைக்கு எதிர் பேசாது அவர் சொற்படி அடங்கி ஒடுங்கி நடப்பாள் இவள் காமத்திற் கீடாய் வாய்ந்த மனைவியென்றறியவும் வேறு தன் ஜாதிக்கு மாறுபட்டவளானல் அதமகுண குணங்களையும் அங்க அடையாளங்களை அறிந்து சங்கினி அத்தினி என்னும் கீழ்த்தர ஜாதி ஸ்திரீ தன் வசப்படுத்தி நடத்தவும் கூடும்.

## அமுதநிலை 16ன் விபரம்

பெருவிரல் 1 புறந்தாள் 2 பரடு 3 முழந்தாள் 4 நிதம்பம் 5 நாபி 6 மார்பு 7 ஸ்தனம் 8 கை மூலம் 9 கழுத்து 10 கபோலம் 11 வாய் 12 கண் 13 நெற்றி 14 உச்சி 15 ஆக இதில் அரையை சேர்த்து 16 என்று சொல்லப்படும், இஃது ஆராய்ச்சியில் மாதா மாதா ருதுவான காலந்தொட்டு கருக்கமலம் வாய் மூடுங்காலம் வரையிலும் பூர்வபக்ஷமென்று அதன் பிறகு மாதவிடாயாகும் காலம் வரையில்

அமர பக்ஷமென்றும் உணர வேண்டும் பஞ்சாங்கத்தில் கூறும் வளர்பிறை தேய்ப்பிறை கணக்கு இதற்கு உதவாது பெண்கள் மாதவிடாயான தினத்திலிருந்து மறுமாதவிடாயாகும் வரை ஒருநாள் முன் பின்னாக பாதிநாள் வரையில் கருக்கமலத்தின் வாய் திறந்திருக்கும் மாதர்களுக்கு வீட்டு விலக்கு கிரமமாக ஆகாமல் 25 நாளைக்கு ஒரு முறையும் 30 தினங்களுக்கு மேற்கூடாமல் ஆகும். இதனால் அமுதநிலை மாறுபடும். அப்படிப்பட்ட அமுதநிலையைக் கண்டு பிடிக்கும் மார்க்கம் எப்படியெனில் வீட்டு விலக்காகும் காலம் எத்தனை நாள் ஆகிறதோ அத்தனை நாட்களையும் மணிகளாக்கி 1 நாளைக்கு 24 மணியைக் கூட்டி 30 நாளைக்கு எத்தனை மணியாகுமென்று வகுத்து அதன்படி அமுதநிலை தெரிந்து அதற்கு தகுந்த தொழிலியற்றி வேட்கையைப் பெருகச் செய்து அகத்தொழில் புரிய நலம்

## பஞ்சாக்ஷரங்களை பஞ்சபாணமாக எய்யும் விதம்

ஏ ஐ அ இ உ இந்த ஐந்தெழுத்தை மலர் கணையாகவும் தன் கண்களை கரும்பு வில்லாகவும் நாயகன் மதனாகவும் நாயகியை இரதியாகவும் பாவனை செய்து நாயகியின் மார்பு ஸ்தனம் கண் உச்சி அல்குல் இந்த ஐந்தெழுத்தை ஓவ்வோர்

எழுத்தாக கண்ணாலெழுதிய லட்சியம் வைத்து எய்தால் அம்மாதற்கு மதன நீர் பெருகும்.

## பஞ்சபாணங்களை எய்யும் விதம்

நெஞ்சில் ஏகாரத்தைத் தாமரைமலர் கணையாகவும் ஆதனங்களில் ஐகாரத்தை மாடின் மலர் கணையாகவும் கண்களில் அகாரத்தை அசோக மலர் கணையாகவும் உச்சியில் இகாரத்தை முல்லை மலர் கணையாகவும் பாவனை செய்து கண்ணாலெழுதி யெய்திடுக.

## மன்மதன் கணை ஐந்தின் விபரம

வசனம் சூதம் சோகு முல்லை நீலம் அவை செய்யுர் அவத்தை சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம் மோகம் மரணமுண்டாக்கும் அவையாவன சுப்பிரயோகம் நினைவு விப்பிரயோகம் வெய்த்த துயிர்த்திரங்கள் வெப்புந்துய்ப்பன தெவிட்டால் யோகம் அழுங்கலும் பலமொழி பிதற்றலும் வசன நினைவை யுண்டாக்கும் சூதகமாவின் மலர் கணை கொங்கையினிடம் பசலை நிறமுண்டாகச் செய்யும் அசோக மலர் கணை கண்களுக்கு அளவில்லாத துயரமுண்டாக்கும் முல்லை மலர் கணை தலை நாக்காரக் கிடையாகத்திடத்தி விடும் நீலமலர் கணை கொல்வது போல மிகுந்த மயக்கமும் நினைவில்லாமையும் செய்யும். இந்த ஐந்து கணைகளையும் முறை முறையே ஒன்றிக்கொன்று செய்கையில் மேற்பட்ட தென்றறிக.

## மதனபீடிகை

மதன பீடமாவது நம்முடைய காலிரண்டையும் உள்ளங்காலோடு உள்ளங்கால் பொருத்த வைத்து நாயகியை அதன் மேல் முத்தமிட்டு அதரபானஞ் செய்து அவளை அசைத்து மெதுவாய்ப் படுக்கச் சொல்லி போகமளித்தால் பிரியா • மனமுண்டாகி, நெடுங்காலம் நாயகனை விரும்பி அழைப்பாள் அந்தப்படி செய்தால் மருந்து மந்திரம் தேவை இல்லை.

## அமிர்தயோகம்

குழந்தை உதிக்காதிருக்கும் மார்க்கத்தைக் கற்றுக் கொண்டால் சதியும் பதியும் அளவுக்கு மிஞ்சி சம்போகம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள் என்றும் கர்ப்பத்தடை கொள்கைகளை எதிர்க்கிறார்கள்.

சாதாரண சதிபதியும் சம்போகம் செய்யுங் காலத்தில் ஏதோ பெண்ணுக்கு சம்போகத்தால் இச்சை இல்லாதது போலவும் ஆண் அவளை பலவந்தப்படுத்துவது போலவும் இவ்வெதிர்ப்புக் கூறுபவர்கள் நினைக்கிறார்கள் அது சரிதானா? அவ்வாறு நடக்கிறது.

ஆணும் பெண்ணும் சம்மதித்தே தான் இருவரும் கூடியேதான் காமரச இன்ப வேதனைப் பருகுகிறார்கள். சாதாரணமாக கணவன் மனைவியும்

பிரியப்படுகிருள் என்று எண்ணும் பொழுதுதான் ஈடுபட மூற்படுகிறாள் பெண் வேண்டா வெறுப்பாக ஆணின் நிர்பந்தத்திருசாகவே ஈடுபடுவது போல் தோன்றினால் அந்த க்ஷணமே ஆணுக்கு கலவியல் இன்பத் தெரியாமல் வெறுப்புத் தோன்றி விடுகிறது. இதையறிந்தே அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்கொடியராகிய விபசாரிகள் தன்னிடம் வரும் ஆண்களிடம் அன்பு கொண்டுள்ளது போல் நடிக்கிறார்கள். ஆதலால் சாதாரணமாக ஆண் மக்கள் ஒவ்வொருவரும் மனைவியின் நலத்தையோ விருப்பத்தையோ எண்ணாமல் நடிக்கும் புருஷர் களும் சிலர் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் குழந்தை ஜெனித்து விடுமே என்று அஞ்சப் போகிறார்களா என்ன? அவர்களுக்கு கர்ப்பத்தடை விதிகள் தெரிந்திருந்தாலும் ஒன்றேதான்.

ஆண் மட்டுமன்று பெண்ணுங் கூட சேர்ந்தே அளவுக்கு மிஞ்சிய கலவியை செய்ய ஆரம்பித்து விடுவார்கள் என்று கூறும் ஆட்சேபம் தவறு தான்.

ஆகவே தம்பதிகள் பரஸ்பரம் ஒருவருடைய நலத்தை மற்றவர்கள் கவனிக்க கூடியவைகளாக இருப்பின் குழந்தை யுண்டாகாது என்பதைக் கொண்டு மிதமிஞ்சிய கலவி செய்யின் அது ஆணுக்கே அதிகமான நஷ்டமும் பலஹினமும் சம்பவிக்கும் அதை புருடனிடத்தில் உண்மை

அன்புள்ள எந்த மனைவியும் விரும்ப மாட்டாள் ஆகவே அவள் அன்பு வார்த்தைகள் கூறி அவனை தன் வசப்படுத்தி அந்த எண்ணத்தினின்றும் தடுத்து விடுவாள் அவளே உத்தமியுமாவாள்.

## மூவிதக் கலவி

ஆன்றோர்கள் கலவியின் மூன்று விதம் உண்டென கூறுகிறார்கள். அவை முறையே உத்தமம் மத்திபம் அதமம் என்பனவாம்.

முதலாவது உத்தமக் கலவி கணவனும் மனைவியும் இருவரும் மனம் ஒருமித்து கூடுதல் ஆரம்பச் சேர்தல் பிரிந்துபின் கூடுதல் ஊடல் கொண்ட காலத்தில் அவ்வூடலை ஒருவாறு கட்டுப்படுத்தி கூடுதல் பிரிய வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தால் முன்னரே கூடுதல் என்பனவாம்.

இரண்டாவது மத்திமக் கலவி புருஷனிடத்துப் பிரேமை இல்லாத நாயகியைப் புருஷன் கட்டாயப் படுத்திக் கலவி செய்தல். அவ்வாறே அன்பில்லாத நாயகனை தன் இஷ்ட காரிய பூர்த்திக்காக வேண்டி வசப்படுத்தி புணர்தல் என்பனவாம்.

மூன்றாவதாக அதமாதக் கலவி தனக்கிசையாத நாயகியைப் பயமுறுத்திக் கூடுதலும் ஆபத்துக் காலத்தில் தன்னிடத்தில் அடைக்கலம் புகவந்த அணங்கை அச்சுணர்த்திப் புணர்தலும் அதமாதக் கலவியாகும்.

# கலவிக்குப்பின் உறங்கும் வகை

ஒரு புருஷனோ அன்றி ஓர் பெண்ணோ தம் விவாஹ சடங்குகள் முடித்து சாந்தி முகூர்த்தம் நடந்தேறின பின் அவர்கள் ஒரே அறையில் ஒரே படுக்கையில் தங்களை கட்டி யணைத்துப் படுத்துக் கொள்ளவேண்டுமென்றும் இல்லையேல் விபச்சாரத் திற்கு ஆளாவார்கள். அது முற்றும் தவறு மனைவி யானவள் தன் கணவனுக்கு செய்யக் கூடிய கடமை களைச் செய்தபின் தனிமையில் சயனிக்க வேண்டும். கணவனும் மனைவியும் சுக ஆரோக்கியத்துடனி ருந்து சந்தானத்தை நாடும்போது தான் அவர்கள் இருவரும் ஒரே படுக்கையிலிருந்து இன்ப கலவி புரிந்த பிறகு நல்ல தண்ணீரில் ஸ்நானம் செய்து ஆண்டவனைப் பணிந்து தனி படுக்கையில் படுப் பதை தம் விரதமாக கொள்ள வேண்டும். மிருக இனங்கூட இந்த முறையை மேற்கொள்ளுகின்றன. அவை பெண் இனத்தோடே இருப்பது கிடையா ஆகவே இவ்வித சேர்க்கையானது இரு பாலருக்கும் தேகாரோக்கியத்தைத் தரவல்லது இருவரும் சதா ஒரேபடுக்கையில் படுத்துறங்குவதால் இருவருடைய கெட்ட சுவாசம் மற்றொருவருக்குப் படுதல் ஆரோக்கியத்திற்கு இடைஞ்சலே அதனால் பலவித நோய்கள் சம்பவிக்கின்றன வைத்திய நிபுணர் களும் இதை ஆமோதிக்கிறார்கள் ஏன்? ஆங்கிலேய

ரும் இந்த முறையை நழுவ விடுவதில்லை இதை இன்னும் இவர்களில்லங்களில் நாம் காணலாம்.

## விந்து கசியா சம்போகம்

கர்ப்பம் உண்டாதிருக்க இன்னவித சம்போகம் கூறப்படுகிறது காதல் உண்டாகி கணவன் ஆண் குறியை பெண் குறிக்குள் நுழைத்து பின்னர் மனைவிக்கு உணர்ச்சி மேலெழுந்து ஆர்வம் அடங்கும் வரை பெண் குறிக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். அம்மாதிரியானல் மனைவி உணர்ச்சியின் சிகரத்தை முக்கால் மணி நேரத்தில் அடைந்து விடுவாள். சில சமயங்களில் அந்த நேரத்திற்குள் ஐந்தாறு தடவை கூட அந்த மாதிரி நிகழக் கூடும். அப்படி அவள் ஒரு தடவையேனும் அடைந்த பிறகே கணவன் ஆண் குறியை தொய்வடையச் செய்து கொள்ளலாம். அத்துடன் அவள் தன்னுடைய உணர்ச்சி உச்ச ஸ்நானம் அடையாமலும் விந்து வெளியாகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த விதம் சம்போகம் செய்யின் விந்து வெளியாகாது அதனல் கர்ப்பம் உண்டாகாது.

இந்த முறையால் பெண்ணுக்கு பூரணமாக கலவி இன்பம் கிட்டுகிறது. அதனல் பெண் இந்த முறையால் நலனையெ அடைகிருள். அநேக தம்பதிகள் மனச்சாந்தியும் ஆத்ம ஐக்கியமும் பெறுவதாக பல அறிஞர்கள் கூறுகிருர்கள்.

புருஷர்கள் விந்தை அடக்குவதென்றும் ஆரம்பத்திலேயே தீர்மானித்துக் கொண்டு தன்னுடைய கலவி உணர்ச்சியை உச்சஸ்தானம் அடைய விடாமல் காத்துக் கொள்வதால் அவனுக்கு தீங்கு உண்டாவதில்லை இம்முறையில் நன்ருகப் பழகி விட்டவர்களுக்கு விந்து வெளியாகவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகுவது கிடையாதாம் பெண் இன்பம் பெற்றதினுல் ஆணுக்கு ஆறுதல் உண்டாகி விடுகின்றனவாம்.

## பெண்கள் ஆண்கள் மீதமர்ந்து சம்போகித்தல்

சில ஜாதியார் பெண்ணின் மீது படுத்து புணர்வதற்குப் பதிலாக ஆணின் மீது பெண்கள் உட்கார்ந்து கலவி செய்கிருர்கள். இந்த விதம் மலையாள வாசிகள் செய்வதரக அறிகிரும். நம்முடை பண்டை நூல்களிலும் முக்கியமாக காண்கிரும்.

தென் இந்தியாவில் இந்த விதம் பெண்கள் ஆண்கள் மேல் அமர்ந்து கல்வி செய்யும் ஜாதியாரிடை அடிக்கடி கர்ப்பம் உண்டாவதில்லை என்றும் அவர்களுடைய ஜனபெருக்க விகிதம் இதர ஜாதியாருடையதை விடப்பாதியே என்றும் ஆன்ருேர் கூறுகிருர்கள். ஆண் பெண் குறியில் தங்க வசதி உண்டு பெண் ஆண் மேல் உட்கார்ந்து கலவி செய்தால் விந்து வெளியானதும் வழிந்து போகும்.

# கிரந்தையுள்ள மாதரைப் புணர்வது

குழந்தை பிறவா திருக்கவும் விந்து விழா திருக்க வும் அதற்காகவே மனைவியிடம் புணராதிருக்க முடியாது ஆண் மகன் ஆசையை அடக்குந் திறனற்றவன் அவ்வாறே பெண்களும் சிலருண்டு அதற்காகவே வேறு முறையொன்றுண்டு அதாவது ரப்பர் உறைகளை உபயோகித்தால் விந்து ஊற ஹேதுமில்லை. அப்படி ரப்பர் உறை உபயோகித் திடில் வழவழப்பான உறையாயிருப்பின் பெண் களுக்கு இன்பஉணர்ச்சி உண்டாவதில்லை ஆகவே கரசுரப்பாக உள்ளது முதலை தோல் போலுள்ளது மான மேலான ரப்பர் உறையை வாங்கி ஆண் குறி யில் மாட்டிக் கொண்டு கலவி செய்யின் அவர் களுக்கு இன்பமாயிருக்கும் அதனுல் நோய் உண் டாகாது தீங்கு ஏற்படாது அன்றி ரோகங்களோ இருப்பினும் அதையும் அண்டாது சிலர் ஆண் குறியில் உறையை மாட்டிக்கொண்டால் தனக்குக் கிடைக்கக் கூடிய சம்போக இன்பத்தை இழந்து ஆண் குறி ரப்பரால் பொதியப்பட்டிருந்தால் உணர்ச்சி உண்டாவதெப்படி என்று கேட்கிறுர்கள் இந்த ஆட்சேபனையும் சரியானதாகத் தோன்ற வில்லை முஸ்லீம்களும் யூதர்களும் ஒவ்வொருவரும் மதானுஷ்டானமான ஆண் குறியிலுள்ள முன் தோலை வெட்டியெடுத்து விடுவார்கள் (சுன்னத்) அதனால் அவர்கள் ஆண்குறியிலுள்ள ரப்பர் உறையைவிட உணர்ச்சியற்ற தோலாய் விடுகின்ற

புறத்தில் விந்து விழும் நாம் உறையை எடுத்து உடன் அந்த விந்து பெண் குறியில் கட்டாயம் பாயும் அதனுல் கர்ப்பம் உண்டாகும் ஆகவே. சம்போகம் முடித்ததும் ஆண் குறி இழுக்கும்போது உறையையும் பிடித்து சேர்த்தபடி இழுக்கவேண்டும் உறையை சுத்தம் செய்து வைத்துக் கொண்டு எத்தனை முறையேனும் உபயோகிக்கலாம் ஆனால் உபயோகிக்கும் சமயம் உறை தாங்குமா என்று பார்த்துக் கொள்ள வேண்டும் இன்றேல் சம்போக காலத்தில் அது கிழிந்து விடும் அதனுல் பல கெடுதல் நேரிடலாம் இதை ஒவ்வொரு ஆண் மகனும் அவசியம் கவனிக்க வேண்டும்.

மேலே சொன்னபடி விதியாக நடத்தி வந்ததால் பலன் நிச்சயம் உண்டாகவே உண்டாகாது ஒரு தடவை உபயோகிக்காவிடில் என்ன என்று இருந்து விடக் கூடாது அது தவறு அதனுல் கெடுதியே.

Cell: 8489777148
ஸ்ரீ செங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு.முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

## விந்துவின் பெருமை

விந்து என்பது இந்திரியம் என்றும் தக்க சத்து என்றும் கூறுவார் புருஷர்களுக்குரியது சுக்கிலம் என்றும் ஸ்ரீகளுக்குரியது சுரோணிதம் என்றும் வழங்கி வருகிறது ஆண் மக்களுக்கு இந்த விந்து ஜீவரத்னமாகிய அரும்பெரும் பொருளாகும்? வேதாந்த சிரவணம் செய்து தன்னைத்தான் அறிவதற்கும் மோக்ஷவீடு பெறவும் விந்து தான் காரணம்

விந்துவிட்டவன் கொண்டு போவான் என்று ஓர் பழமொழியும் உண்டு விந்துவில் பலமில்லையேல் நரம்பு அனைத்தும் தளர்ச்சியும் விந்தை விரயம் செய்ய அஸ்வத்தாமனுக்கும் நாக பாம்புக்கும் தலையில் மாணிக்கமிருந்ததாக சாஸ்திரம் கூறுகிறது. நித்திய பிரம்மச்சாரிக்கும் யோகாப்பியாசிகளுக்கும் விந்து மணியாக கட்டி விடுகிறது உள்ளே அதனல் அவர்கள் சரீரம் தளர்வதற்கு இடமில்லை மகான்கள் காயசித்தி பெற்றனர் காமத்திலுழல வேண்டுமென்ருல் விவாகம் செய்துக்கொண்டு வயிரம் போன்ற பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு இல்வாழ்க்கை நடத்திக்கொண்டு வரலாம் ஆதலால் விந்துவை மாதர்களிடமிருந்து அதிக செலவு செய்யாமல் காப்பாற்ற வேண்டும் அது ஆண்களின் முக்கிய கடமையாகும் விந்துவை அதிகமாக செலவு செய்யும் ஆண்கள் பலமிழந்து சரீர சுகங்கெட்டு சோம்பலும் நித்திரையுங் கெட்டுப் கஷ்டப்படுவார்கள் அவர்களுதவி முயற்சியும் ஜீவன முயற்சியும் பாழாய் போகும் மாதர்களது சரீர லீலா விநோதங்கள் ஒரு முறையில் நாற்பது சுவாசங்கள் நஷ்டமடைகின்றதென்று ஆயுர்வேதம் கூறுகிறது. அதிகமாக மாதர் சம்போகத்தில் உருமையான விந்து அதிக சிலவும் அதனல் மேகம் சூலை குஷ்டம் முதலிய அசாத்திய வியாதிகள் சம்பவிக்கும் என்று சாஸ்திரக்காரர்கள் சொல்லுகிருர்கள். ஆகவே எந்த விதமாகப் பார்க்கிலும் சம்போகமானது ஒரு வரம்புக்

குட்பட்டதாகயிருப்பின் திரேகாரோக்கியமும் நல் வாழ்வும் உண்டாகும்.

## பலதேச பாவையரை புணர்வது

ஒவ்வொரு தேசத்திலுள்ள ஆண் பெண் உணவுச்சத்து சரீர ஆரோக்கியமும் தொழில் முறைகள் அவை மாறுபட்டு இருப்பதால் கலவி லக்ஷணங்களும் மணவிருப்பமும் புணரும் தன்மையும் வித்தியாசப்படும். அதனால் பல தேசத்து பெண்களை புணர்ச்சியில் மகிழ்விக்கும் முறைகளை இங்கு மேற் கொண்டு உணர்க.

மத்திப தேசத்துப் பெண்கள் நகக்குறி பற்குறி இவைகளைப் பொறுப்பார்கள் ஆடவர்கள். அதாவது புருஷர்கள் ஆலிங்கனத்தினால்தான் அவர்கள் மகிழ் வெய்துவார்கள் அவந்திதேச பெண்களோ வெனில் புருஷர்கள் செய்யும் சித்திர வேலைகளினால் மகிழ் வடைவார்கள் மாளவதேசப் பெண்களோ வெனில் இறுகத் தழுவிக் கத்தனடி நகங்களாலும் குறி சும்பனத்தாலும் மகிழ்ச்சி கொள்வார்கள். சிந்து ஐராவதி நர்மதி சந்திரபாக நதி தீரம் யமுனை நதி தீரம் இப்பிரதேசத்துப் பெண்கள் நிதம்ப சும்பனத்தால் மகிழ்வடைவார்கள் கலிங்க தேசத்துப் பெண்கள் தந்தகுறி அகங்கை தாடனம் புரங்கை தாடனம் இவற்றால் மகிழ்ச்சி கொள்வார்கள் கன்னடம் தெலுங்கு தேசப்பெண்கள் இரவும் பகலும் நித்திரையையும் விரும்பாமல் சதா புணர்ச்சியிலேயே இருக்க

அகமகிழ்வார்கள் கோசல தேசப் பெண்கள் காமக் கவலையினால் கடிதடத்தில் திரவ மிகுதியாய் ஊறும் அதனால் கடினதாடனத்தாலும் பற்குறியாலும் சந்தோஷிப்பார்கள் கடின புணர்ச்சி செய்தால் அவர்கள் மனம் பரமானந்தமடையும்மஹாராஷ்ட்ர தேசப் பெண்கள் மதன நூல் வல்லவர்கள் சுரதலீலை தெரியாத புருஷர்களை மதிக்க மாட்டார்கள். ஆகவே மதன சாஸ்திர விதிப்படி கலவி செய்தால் அவர்கள் மகிழ்வார்கள் கேரள தேசத்துப் பெண்கள் ஆடவர் மேல் மிகவும் நட்புடையவர்கள் உபகாரத்தில் கவலையுள்ளவர்கள். அதனால் ஆவர்களை மாரனாலயத்தில் சும்பனம் செய்யின் மகிழ்வார்கள்உபகரதம் என்னால் புருஷன் கீழும் பெண் மேலும் இருந்து புணர்வது இவர்கட்கு இந்த முறைதான் வெகு பிரியம்.

சோழ தேசப் பெண்கள் உபகாரத்திலும் இனிய சொற்களிலும் ஆசையுடையவர்கள் அவர்களை ஆலிங்கனம் அதர முதலான புறதொழில்கள் செய்தால்தான் மனங்குளிர்வார்கள் பாண்டி தேசப் பெண்கள் புருஷன் இறுக தழுவி பற்குறி நகக்குறி வைத்து அதரபானம் செய்து ஒரு ஸ்தன காம்பை நெருடி சும்பன மாதிரி செய்கைகளால் மகிழ் செய்து புணர வேண்டும் ஓட்டியம் யவ்னம் வங்கம் இதர தேசத்துப் பெண்களை இறுகத் தழுவி கட்டி யணைத்து ஆலிங்கனம் செய்து சும்பனாதி லீலைகளால் மகிழ் விக்க வேண்டும். இலங்கை தேசத்துப் பெண்கள்

எண் வகை புறத்தொழில்களால் மகிழ்வடைவார்கள். அதனால் அவர்களை இராப்பகல் விடாது காமத்திரு விழாவினால் சுகங் கொடுக்க வேண்டும்.

எத்தேசத்து மங்கையினராலும் அவரவர்கள் குறிப்பறிந்து அவர்களை மகிழ்வித்து அவர்கள் மனம் ஒருமைப்பட்ட பிறகே புணர வேண்டுவது அறிவுள்ளோர் கடமையாகும் இருவர் போகமும் காம போகமாகிலும் அப்போதுதான் கர்ம சுகத்தின் மகிமை தெரியும் பெண்கள் புருடனிடத்து அன்பு கொண்டு தன் வயமாவார்கள்.

## மாதவிடாய் நின்ற பிறகும் கர்ப்பம்

பெண்களுக்கு 40, 50 வயதில் மாதவிடாய் நின்று போக கர்ப்பம் உண்டாவது இல்லை என்பது சாதாரணமானவர்கள் அபிப்பிராயமாகும், ஆனால் அநேக பெண்களுடைய சினைப்பைகள் மாதவிடாய் நின்ற பிறகும் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முட்டைகளைத் தயாரித்து அனுப்பும் வேலையை நடத்தி வருவதுண்டு அதனால் மாதவிடாய் நின்று போன பெண்களுக்கு குழந்தை உண்டாவார்கள் மாதவிடாய் நின்று பிறகும் குறைந்த மூன்று வருடங்கள் ஏனும் கார்ப்பத்தடை அனுஷ்டிக்க வேண்டும் இல்லையேல் கர்ப்பம் உண்டாகும். ஆகவே மாதவிடாய் காண்பதற்கும் கர்ப்பம் உண்டாவதற்கும் சம்பந்தமேயில்லை என்கிறார் டாக்டர் ஸ்டோப்ஸ்.

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் பொழுதே கர்ப்பம் உண்டாகவும் செய்யலாம். அப்படி பல பல சந்தர்ப்பங்களில் நேருவதுண்டு மற்றும் பெண்கள் குழந்தைப் பெற்று ஒருமாதம் கழிப்பதற்குள்ளாகவே கருதரித்து வருவதும் உண்டு அதை நாம் காண்கிறோம்.

பால் கொடுக்கும் வரை குழந்தை உண்டாகாது என்றெண்ணி அதிக காலம் பால் கொடுத்துத் கொண்டிருந்தால் எண்ணம் கைக்கூடாது என்பது மட்டுமன்று தீமைகளும் நேருகின்றன. சாதாரணக் குழந்தைக்குப் பத்து மாதம் வரைதான் பால் கொடுக்கலாம். அது வரையில் தான் அந்தத் தாய்ப்பாலை ஜீரணிக்கும் வகையான அதன்குடல்களும் அமைந்துள்ளன. ஆனால் பத்து மாதத்திற்கு அதிகப்பட்டு விட்டால் அதற்கு வேறு உணவு உண்பதற்குத் தக்கதாக பற்களும் முளைகின்றன தாயின் பாலும் போஷிக்கக்கூடிய சக்தியில்லாமல் போய் விடுகிறது. ஆதலால் பத்து மாதங்களுக்கு பிறகும் முலைப்பால் கொடுத்து வந்தால் குழந்தை போதுமான போஷண உணவுக் கிடைக்காது போய் விடும் அதனால் பல வியாதிகளும் உண்டாகின்றன.

ஆகவே தாயானவள் தன்னுடைய முலைகளில் பால்சுரந்து கொண்டிருப்பதால் அதுவே குழந்தைக்கும் போதிய உணவு என்று எண்ணி கொள்ளுகின்றாள். ஆனால் குழந்தையோ உடம்பு நெளித்து

வயிறு கழுத்து கை கால்கள் சிறுத்து நெஞ்சு கூடி போகிறது. அத்தகைய குழந்தைகள் அநேகர்க்கு ஜீரணம் சீர்குலைந்து போகிறது. சிலருக்கு மூளைக் கோளாறும் உண்டாகி விடுகிறது தாயும் அனுவசிய மாய் தன்னுடைய ரத்தத்தைப் பாலாக்க இடங் கொடுப்பதால் பலஹீனமடைந்து விடுகிறாள் சில பெண்களுடைய கண்களும் காதுங்கூட கெட்டு விடுகின்றது.

ஆதலால் குழந்தைக்கு தாய்ப்பாலே மிகச்சிறந்த ஆகாரமாய் இருப்பினும் அதற்கு அதிக நாள் கொடுத்து கர்ப்பத்தைத் தடுத்துவிட முயல்வதால் எவ்வித பயனும் உண்டாவதில்லை அதற்கு மாறாக வே தீமைகள்தான் உண்டாகின்றன.

## பிரசவக் காலங்கள்

குழந்தை உதிக்க மார்க்கம் உண்டு குழந்தைப் பெற பலமுண்டு குழந்தையும் வேண்டியதுதான் இந்நிலையில் கர்ப்பம் தரிப்பதில் தவறேயில்லை தான் ஆயினும் பிரசவம் எந்த மாதத்தில் அதை நாம் கவனிக்கவேண்டாமோ? பிரபஞ்சத்தில் சகல ஜீவன் களும் பழகி பெறுவது யாவருக்கும் சந்தோஷமும் சுகமும் தரும் இன்பகரமான வசந்த மாதத்திலாகும் பக்ஷிகள் முட்டைகள் வைத்துக் குஞ்சு பொரிப்பதும் அக்காலத்தில் தான் மிருகங்களும் கர்ப்பமுற்று

குட்டிகள் ஈனுவதில் அதே காலத்தில் தான் மரஞ் செடி கொடிகளும் பூத்து காய்ப்பதும் கனி தருவதும் அநேகமாக அந்த வசந்த காலமே தான் ஆகவே மனித வர்க்கமும் கர்ப்பந்தரித்து பிரசவிப்பது அந்த காலமென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை கடவுள் சிருஷ்டியில் வேறுபாடு யிருக்க காரணமேயில்லை.

ஆயினும் நாம் மக்கள் பெறுவது எக்காலத்தில் என்று நித்தியமேயில்லை அநேகர் எவரும் ஐப்பசி மாதமான மழைக் காலத்திலே பிரசவிக்கின்றார்கள். இரவும் பகலும் அடாமழை இந்த மாதிரியான வேளைகளில் பிரசவ வேதனைபடுகிறார்கள் பரிதாபம்.

நகரங்களிலுள்ளோர் அன்றி குக்கிராமங்களில் குடிசையில் வாழும் எளிய குடும்பத்தினரின் கதி எவ்வாறிருக்கும் வைத்திய வசதி உண்டா? அவ்வூரிலுள்ள கத்துக்குட்டி அம்பட்டச்சிதான் டாக்டர் அவள் வருவாள் பார்ப்பாள் தலை மாறி வரும் டாக்டரை அழைக்கவும் மார்க்கம் இருக்காது பண முடை வெளிவரின் மழை இந்த நிலையில் தாயும் சேயும் வைகுண்டப் பிராப்திதான் இக்கொடுமைக்கு தக்க வழியில்லையா? மேல் சொன்ன காலத்தில் பிரசவித்தால் இத்யாதி சம்பவங்கள் இல்லையே? உண்டு நாம் நினைக்கில் கர்ப்பம் வரும் அதற்கு கொஞ்சம் சகிப்புத் தன்மை வேண்டும்.

தவிர மனித விந்து ஒன்பது மாதம் ஒரு வாரத்தில் மகசூல் தரும் இதையாவரும் அறிந்ததுதானே?

அதனால் மழைக் காலத்திலும் பிரவசம் வேண்டா மென்றால் எந்த மாதங்களில் கர்ப்பம் உண்டாக்கக் கூடாது என்பது கஷ்டமான காரியமென்றே மார்கழி தை பங்குனி கர்ப்பமுற்றால் முறையே ஐப்பசி கார்த்திகை மார்கழி மாதங்களில் கர்ப்பம் உண்டா காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கிய மானது.

## மோகம் மயங்குவதேன்

மணஞ் செய்கிறோம் மோகம் உண்டாகிறது இதைப் பற்றி கவிஞர்களும் பக்தர்களும் கூட புகழ் கிறார்கள் போற்றுகிறார்கள் சதிபதிகள் சந்தோஷ சாகரத்தில் சொக்கி விடுகிறார்கள் காதலனும் காதலி யும் உடலும் உயிருமாக ஒத்து இல்லறம் நடத்து கிறார்கள் கணவனை கண்டதும் மனைவி அன்றலர்ந்த செந்தாமரை மலர்போல தன்னுடைய பதி முகத்தை பரிமளிக்கச் செய்கிறாள் இன்பம் பொங்கி வழிகிறது மணாளன் சொல் மனைவி காதுக்கு தேவாமிர்தம் போல் தித்திக்கின்றது கணவன் அஸ்தம் தன் மீது பட்டால் போதும் எண்ணுவதற்கரிய இன்ப வெள்ளம் கரை புரண்டு ஒடுகிறது காதலே வாழ்வு காதல் இன்மையே மரணம் காதற் கனியாக குழந்தை பெறுகிறாள் மக்களை யீன்று மட்டில்லா ஆனந்தம் அடைகிறாள் இதனைக் கண்டு அக்கம் பக்கமுள்ளவர்கள் பொறாமை யடைகின்றனர்.

இவ்வாறு சில ஆண்டுகள் கழிகின்றன இவ்வாறிருந்த இவர்கள் அருவருப்புக் கொள்ளு கின்றனர் ஏன் இந்த விபரீதம்? என்ன சச்சரவு வந்தது சல்லாபமாயிருந்தவர்கள் சஞ்சலமுற்று சண்டையிடுவானேன் நாயகன் குரல் நாயகிக்கு நாராசமாய் விட்டதா ஏன்? காதல் கசந்து விட்ட மனைவிக்கு கணவன் செய்த துரோகம் என்ன குழந்தை வேண்டுமென்று விரும்பினார்கள் எண்ணம் ஈடேறவில்லை கவலைப்பட்டார்கள் கோயில் தீர்த்தம்பல சென்றார்கள்விரதம் பூண்டார் கள் மருந்துண்டார்கள் தானங் கொடுத்தரர்கள் போற்றி வளர்த்தார்கள் புகழ்ந்தார்கள் அடுத்தடுத்து மக்களுண்டாயின போதும் போதுமென்று பெரு மூச்சு விடுகிறார்கள் காரணம் தொந்தரைதான் அன்று இன்பம் இன்று துன்பம்.

இன்பந்தான் காதல் ஆனால் அடுத்தடுத்து கர்ப்பம் கஷ்டப்படுவது பெண்தான் கவலையுறுவதில் ஆச்சரியமில்லை காதலால் கற்பம் வந்து விடுமோ என்ற பயம் கர்ப்பமுற்றால் காதலனுக்கு இரையா? அன்று இங்கேயே சித்திரவதையா? என்று கலங்கு கிறாள் ஆகவே அதிக குழந்தைப் பெறுவது காதலில் கசப்பேற்பட்டு விடுகிறது மகிழ்வாய் வாழ்ந்த சதிபதிகளிடம் மனவேற்றுமை தோன்றி விடுகிறது

இது எவ்வளவு துரதிஷ்டம்! தம்பதிகள் சல்லாப மாய் வாழ வேண்டுமானல் கால வரையரை அறிந்து கணவன் நடந்துக் கொண்டால் காதல் ஒருக்காலும் கசக்காது.

## மானிடர் ஒழுக்கம்

இவ்வுலகின் கண் வாழும் இல்லறவாசிகள்ாகிய குடும்பஸ்தர்களான சதிபதி ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய சர்வ மர்ம ஸ்தானங் களை சாங்கோபமாக சொல்லி யிருப்பதைக் கேட்டு ணர்ந்து எவர்களும் தங்கள் தங்கள் வாழ் நாட்களை வீணுக்காது நல்ல சரீர சுகத்தோடிருந்து உத்தம புத்திர சந்தானங்களை யடைந்து தான தருமங்களை செய்து மறுமையில் பிரயோசனமாகிய முக்தி இன்பத்தைப் பெறுவதற்குண்டான கடவுளை வணங்கி இன்புற்றுருப்பீராக இதை விட்டு ஆண் பெண்களை மயக்கவும் பெண் ஆணை மயக்கவும் அநேக விதமான மந்திரங்களும் மை மருந்துகளும் குளிச்சங்களும் தாயத்துக்களும் மற்றவைகளிலும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு வீணாக பணச் சில விட்டுசெய்யுங் காரியங்களெல்லாம் பிரயோசன மற்ற தாவதுடன் தேககெடுதியும் அடுத்த பிறவியில் அலியாய் பிறந்துயாவற்றாலும் இகழ்வதோடல் லாமல் நரகத்திற்குள்ளாகி அதிகமாக கஷ்டங்கள் வரும் தவிரவும் அடாது செய்தால் படாது படுவீர்

என்னும் பழமொழியை நன்குணர்ந்து இல்லற நண்பர்கள் அடாத காரியங்களை ஒழித்து உத்தம குணத்தை மேற்கொண்டு உயர்வோருடன் உறவாடி உலகில் வாழ்வது உசிதமென்று உணர்வீராக.

கொக்கோக நுட்பம் முற்றிற்று

---

# அட்டவணை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | நூல் வரலாறு விண்ணப்பம் | 3 |
| 2 | மனிதப்பிறவியின் மகிமை | 4 |
| 3 | பூர்வீகக் கவி | 6 |
| 4 | கொக்கோக சொருப சூசகம் | 7 |
| 5 | ருதுகால சந்தான விபரம் | 10 |
| 6 | மதனுகிய கடவுள் துதி | 11 |
| 7 | உத்தம ஜாதி புருஷன் லக்ஷணங்கள் | 12 |
| 8 | 2-வது மத்திய ஜாதி புருஷ ,, | 14 |
| 9 | 3-வது அதம ஜாதி புருஷ ,, | 15 |
| 10 | 4-வது அசுவ ஜாதி புருஷ ,, | 16 |
| 11 | 4 வித ஜாதி ஸ்திரீகளின் லக்ஷணமும் குணமும் | 18 |
| 12 | 1-வது பத்தினி ஜாதி பெண் லக்ஷணமும் ,, | 19 |
| 13 | 2-வது சித்தினி ஜாதி பெண் லக்ஷணமும் ,, | 21 |
| 14 | 3-வது சங்கினி ஜாதி பெண் லக்ஷணமும் , | 23 |
| 15 | 4-வது அத்தினி ஜாதி பெண் லக்ஷணமும் ,, | 24 |
| 16 | சதிபதி பொருத்தம் | 26 |
| 17 | மருவுங் காலமும் கரணமும் | 26 |
| 18 | விவாகப் பெயர்கள் | 30 |
| 19 | மனைவியின் மகிமை | 31 |
| 20 | மாதர்கள் மிதபோக கால விளக்கம் | 31 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 21 | மாதம் எத்தனை நாள் மருவுவது என்றறிக | 33 |
| 22 | மிதமிஞ்சிய போகத்தால் வரும் கெடுதி | 33 |
| 23 | யோகத்துக்குறிய ஆயுள் விளக்கம் | 35 |
| 24 | போகத்துக்குறிய நக்ஷத்திர திதி | 36 |
| 25 | கூடத்தகாத பேர்கள் | 37 |
| 26 | மிதபோக விருத்தி | 38 |
| 27 | மூவகை ஜாதி ஆண்களின் லட்சணங்கள் | 38 |
| 28 | மூவகை ஜாதி பெண்களின் லட்சணங்கள் | 39 |
| 29 | ஸ்ரீகளின் பருவப் பெயர்கள் | 41 |
| 30 | ஏழுவகைப் பெண்களுக்கு பருவப் பெயர்கள் | 42 |
| 31 | ஏழுவகை பெண்களுக்கு அமுதநிலை நிற்குமிடம் | 42 |
| 32 | மூன்னிரண்டு கடையொன்றும் நீக்கி மற்ற நால்வரை கூடும் வகை | 43 |
| 33 | மாதர்கள் புணர்ச்சிக்குறிய நாள் | 43 |
| 34 | கற்பச் சின்னங்கள் | 44 |
| 35 | கருப்பத்தில் சிசுமிரித்த சின்னங்கள் | 44 |
| 36 | மலட்டுச் சின்னங்களும் மருத்துகளும் | 48 |
| 37 | காப்பந் தரித்தலின் குணங்கள் | 48 |
| 38 | புணர்ச்சியினியல்பு | 50 |
| 39 | ஆண் சிசு அடையாளம் | 54 |
| 40 | பெண் சிசு அடையாளம் | 55 |
| 41 | ஆண் மலடு விபரம் | 56 |
| 42 | பெண் மலடு விபரம் | 57 |
| 43 | இன்னுர் மலடென அறியும் விபரம் | 57 |
| 44 | முகக்குறி லட்சணம் | 57 |
| 45 | குறி அளவு | 61 |
| 46 | அங்குலி யோகம் | 61 |
| 47 | குறி லட்சணம | 62 |


Cell: 8489777140
ஸ்ரீ சாங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு.
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 48 | சமரதம் | 62 |
| 49 | இந்நூலினியல்பு | 63 |
| 50 | அமுதநிலை | 63 |
| 51 | அமுதநிலை ஸ்தானத்திற்குரிய தொழில் | 64 |
| 52 | கலவிக்குறிய மந்திரம் | 65 |
| 53 | ஆலிங்கணம் 5ன் விபரம் | 66 |
| 54 | சும்பனம் 11ன் விபரம் | 66 |
| 55 | நகக்குறி விபரம் | 66 |
| 56 | தந்தக்குறியின் விபரம் | 66 |
| 57 | தாடனம் அங்குலியோக விபரம் | 67 |
| 58 | அமுதநிலை 16ன் விபரம் | 68 |
| 59 | பஞ்சாக்ஷரங்களை பஞ்சபாணமாக எய்யும் விதம் | 69 |
| 60 | பஞ்சபாணங்களை எய்யும் விபரம் | 70 |
| 61 | மன்மதன் கணை ஐந்தின் விபரம் | 70 |
| 62 | மதனபீடிகை | 71 |
| 63 | அமிர்தயோகம் | 71 |
| 64 | மூவிதச்கலவி | 73 |
| 65 | கலவிக்குப் பின் உறங்கும் வகை | 74 |
| 66 | விந்து கசியா சம்போகம் | 75 |
| 67 | பெண்கள் ஆண்கள் மீதமர்ந்து சம்போகித்தல் | 76 |
| 68 | கிரந்தியுள்ள மாதரை புணர்வது | 77 |
| 69 | விந்துவின் பெருமை | 78 |
| 70 | உறை உபயோகிக்கும் வகை | 81 |
| 71 | பலதேச பாவையரை புணர்வது | 81 |
| 72 | மாதவிடாய் நின்ற பிறகு கர்ப்பம் | 83 |
| 73 | பிரசவ காலங்கள் | 85 |
| 74 | மோகம் மயங்குவதேன் | 87 |
| 75 | மானிடர் ஒழுக்கம் | 89 |


முற்றிற்று

சீனிவாச அச்சகம், சூளை. சென்னை-112.